# திராவிடநாடு

17—12—61 | வார வெளியீடு | விலை 16 காசு


## நிம்மதி பிறக்கும் நேரம்!

—[ ந. அலி, பி. ஏ. ]—

சிந்திய இரத்தம் திராவிட மண்ணில்
செந்நிறம் ஏற்றிச் செல்லுதடா!
வெந்தண லாக எரியுது நெஞ்சம்
வேதனைக் கண்ணீர் பெருகுதடா!
கொந்தளிக் கின்ற எரிமலை யாகக்
கொதிக்குது இரத்தம் கொதிக்குதடா!
சிந்தனை வேண்டாம் செருமுனை நோக்கிச்
சீறி எழுந்துநீ சென்றிடடா!

இறப்பினைக் கண்டு பயந்திட வேண்டாம்
இறப்பது நாளை உறுதியடா!
பிறந்தது போல இறப்பதும் திண்ணம்
பேசிடும் சரித்திரம் கேட்டிடடா!
திறந்தது கோட்டை வெற்றி யுடன்நீ
தென்னவர் புகழைப் பாடிடடா!
நிறைந்திடும் மகிழ்ச்சி உறைந்திடும் நெஞ்சில்
நிம்மதி பிறக்கும் நேரமடா!

விடுதலைப் பயிரை அழித்திடு வோரை
வேருடன் கிள்ளி எறிந்திடடா!
கெடுதலை எண்ணும் மனிதரைக் கண்டு
கெக்கலி கொட்டிச் சிரித்திடடா!
அடுகளம் உனக்குப் புதியதுமல்ல
அஞ்சுவதேனோ திராவிடனே!
விடுபகை என்றே புறப்படு வெற்றி
விரைந்திடும் உன்றன் அடிகளுக்கே!

# பூட்டு!

மனிதன் பூட்டுச்செய்ய ஆரம்பித்த வேளை......?

இரும்பின் வலிமையை உணர்ந்து, அதை மனிதன், தன் வாழ்வில் மெல்ல மெல்லப் பயன்படுத்திக் கொண்டு வந்தகாலம்! நாகரிகத்தின் முதற்படியில் மனிதன் அடிவைத்த ஆரம்ப நேரம்!

அப்போது, ஓர் இடத்தில்......

சேமித்துவைத்த பொருளைச் 'செல்வம்' என்றழைத்து, அதை மரப்பெட்டியில் வைத்து, அதன்பின் இரும்புப் பெட்டியில் இட்டு, மூடி, அதை யாரும் திறக்காமல் இருக்க, அப்பெட்டியின்மேல் பெரிய பாரத்தை வைத்தான்.

ஒரு நாள், பெட்டியின்மேல் இருந்த பாரம் கீழே உருட்டப்பட்டு இருக்கக் கண்டான். தனது செல்வமும் காணுது போயிருந்தது! உடைமையாளனுக்கு உள்ளம் பதறியது; உடல் துடிதுடித்தது!! எடுத்துச் சென்றவனைத் "திருடன்" என்று திட்டினுன்! "திருட்டுக் கொடுத்துவிட்டேனே" என்று தலை மேல் அறைந்துகொண்டான். இதயக்கொந்தளிப்பின் வேகம் தணிந்த பின், இனிமேலும் இப்படித் 'திருட்டு'ப்போகாதிருக்க வழி என்ன என்று சிந்தித்தான். "பெட்டிக்கு அருகிலேயே எப்போதும் இருக்கலாமா?" "அப்படியானல் பிறவேலைகளைக் கவனிப்பது யார்?" "எனது அடியாட்களைக் காவல் செய்யச் சொன்னல்?" "ஒருவேளை அவர்களே திருடிவிட்டால்......?" இப்படி எண்ணப் போராட்டம்......

வெறிபிடித்தவனைப்போல், தனது நண்பன் ஒருவனை எண்ணி ஓடினுன். அவன் ஒரு அறிவியல் அறிஞன். 'இரும்பை' வைத்துக் கொண்டு அப்படியும் இப்படியுமாகச் சிறுசிறு கருவிகள் செய்து கொண்டிருப்பான்.

அவனிடம் "திருட்டுக்கொடுத்தவன்" சென்று நடந்ததைக் கூறினுன்; கூறி, "நண்பனே! என்னைத் தவிர அந்தப் பெட்டியை வேருெருவன் திறக்கக் கூடாதபடி ஒருவழி செய்து தா" என்ருன்.

சொன்னதைக் கேட்டான் அறிவியல் அறிஞன்; மெல்லச் சிரித்துக் கொண்டான்.

திருட்டுக் கொடுத்தவன் "நீதான் மிகப் பெரிய அறிவாளியாயிற்றே... உன்னுல் முடியாதது உண்டா? இரும்பைப்போல உறுதியானது வேறில்லை: உன்னைப்போல அறிவாளியும் வேறு இலர், 'திருடனை'த் தடுக்க நீ உன் அறிவெல்லாம் பயன்

**தமிழ்க்கனல்**

படுத்தி ஒருகருவி செய்துதா. நீதான் மிகப் பெரிய அறிவாளியாயிற்றே" என்று தன் வேண்டுகோளைப் புகழ் மொழியில் கலந்து சொன்னுன்.

"மலைபோல் குவிந்திருக்கும் எனது செல்வம் திருடர்களால் கரைந்துவிடும். கடல்போல் இருக்கும் எனது சேமிப்பு திருடர்களால் குறைந்துவிடும். ஆகையால், என் இனிய நண்பனே, மனிதர்களில் பேரறிவு படைத்தவனே, 'திருடர்களிடமிருந்து செல்வத்தைக் காப்பாற்றிய வேலி' என்ற விருது உன்னைத் தேடிவர, எல்லையில் அடங்காத அறிவாளியே...நீ உன் திறமை எல்லாம் காட்டி அதற்கொரு கருவி செய்துதா" என்று தனது வேண்டுதலை மேலும் புகழுரையுடன் குழைத்துத் தந்தான்.

அந்த அறிவியல் அறிஞனும், தனது திறமையெல்லாம் காட்டி, ஒரு கருவிசெய்துவிட்டான். திருட்டுக் கொடுத்துவிட்டுக் காத்துக் கிடந்த தனது நண்பனை அழைத்து, அதைத்தந்து "இதோ இதை எடுத்துக்கொள். இதன் பெயர் "பூட்டு" என்பேன் என்ருன். அதைப் பெட்டிக்கு மாட்டும் விதத்தையும் கற்றுத் தந்தான். உடைமையாளன் மகிழ்ந்தான்.

"இதுபோல் கதவுக்கும் ஒன்று வேண்டுமே! என்று கேட்டான். "சரி தருகிறேன்" என்ருன். "வேலிக்கும் ஒன்று வேண்டுமே..." என்று கேட்டான்—மேலும் ஒன்று. "இதுபோல, ஆயிரக்கணக்கில் செய்ய இதோபார் திட்டம்!" என்ருன் அந்த அறிவியல் அறிஞன் பெருமிதத்துடன். "பூட்டுச் செய்தது மிகப் பெரியசாதனை" என்றது அவன் வாய்.

அவ்வூரில் இருந்த வேறு சில "சேமிப்புக் காரர்களும்" இந்த அறிவியல் அறிஞனிடம் வந்து, ஆளுக்கொரு பூட்டு வாங்கிக்கொண்டு அவனது "அறிவைப்" பாராட்டிச் சென்றனர்.

அந்த அறிவியல் அறிஞனுக்கு ஒரு இதயம். அந்த இதயத்தின் ஒரு மூலையில், "வாழ்க்கை எப்படி வாழ்வது" என்பதுபற்றிய, பக்குவப் படாத நல்லெண்ணங்கள் நிர்வாணமாக இருந்தன. முழு உருப்பெற்று வெளிவரவில்லை.

"இப்படி வாழ்ந்தால் நன்ருக இருக்குமே" என்று ஒரு சில எண

( 4-ம் பக்கம் பார்க்க )

// தாங்கனிகா விடுதலை //

மலர் 20 ] ஆண்டு சந்தா ரூ. 8 (17—12—61) தனிப்பிரதி 16 காசு [ இதழ் 17

"மனித உரிமைகளுக்காக நாம் கடுமையாகப் போராடினோம். ஏனெனில் நிறம் ஒன்றின் காரணமாகவே நம்முடைய அடிப்படை உரிமைகள் ஏனையோரால் மறுக்கப்பட்டு வந்துள்ளது. எனவேதான், ஒருவனுடைய நிறத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் நாட்டுப் பற்றை அடிப்படையாகக்கொண்டு நாம் மற்றவர்களுக்கு பிரஜா உரிமை வழங்குவோம்"

இப்படிக் கூறியவர் வேறு யாருமல்ல. இன்றைய தினம் விடுதலைப் பண் இசைத்துக்கொண்டிருக்கும் தாங்கனிகா நாட்டின் தேசியத் தலைவரும் அந்த நாட்டு முதலமைச்சருமான ஜூலியஸ்நைரேர் என்பவர்தான்.

இருண்ட கண்டம் என்று சொல்லக்கூடிய தென்னாப்பிரிக்காவின் கிழக்குப் பகுதியில் உள்ள தாங்கனிகா நாட்டு மக்கள் பல்லாண்டு காலமாகவே அடிமைகளாய் வாழ்ந்து வந்தார்கள். உண்பதற்கு உணவு இல்லை. உடுப்பதற்கு உடையில்லை. தங்குவதற்கும் இடமின்றி அந்நிய ஏகாதிபத்திய வெறியர்களின் ஆட்சியில் பசி, பிணி, கல்வியின்மை ஆகிய கொடுமைகளுக்கு ஆளாகி மிருகத்திலும் கேவலமான வாழ்க்கை நடத்திவந்தனர்.

முதல் உலக யுத்தம்வரை இருபது ஆண்டுகளாக அந்த நாடு ஜெர்மன் ஆதிக்கத்திலும், அதற்குப்பின்னர் கடந்த 43 ஆண்டுகளாகப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் உடும்புப்பிடியிலும் சிக்கிச் சீரழிந்துகொண்டிருந்தது. அவர்களது செல்வம் அந்நியர்களால் சூறையாடப் பட்டுவந்தது.

362,000 சதுரமைல் பரப்பளவும் 95-இலட்சம் மக்களைக் கொண்டதுமான தாங்கனிகா கடந்த ஏழாண்டுகளாக மிகவும் அமைதியான முறையில், பலாத்காரமற்ற வகையில் தன்னுடைய விடுதலைக்காகப் போராடிவந்தது.

இன்றைய தினம் அந்த நாட்டின் முதலமைச்சராக உள்ள ஜூலியஸ் நைரேர் தலைமையில் தாங்கனிகா ஆப்பிரிக்க தேசிய கட்சி கட்டுப்பாடான முறையில் ஓர் மாபெரும் விடுதலை இயக்கத்தை நடத்திவந்ததன் விளைவு, டிசம்பர் 8-ந்தேதி நள்ளிரவு 12 மணிக்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் அந்த நாட்டுக்கு விடுதலை வழங்கினர். தென்னாப்பிரிக்காவில் இருபத்தொன்பதாவதாக விடுதலைப் பெற்றுள்ள தாங்கனிகா இன்றைய தினம் காமன்வெல்த்தின் 13வது உறுப்பினராகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது மட்டுமல்லாமல், உலக மன்றமாகிய ஐ. நா. பேரவைக்கும் உறுப்பினராவதற்கான விண்ணப்பத்தை அனுப்பி இருக்கிறது.

தாங்கனிகா நாட்டு மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே விடுதலை விழாவை தலைநகரான டாரே சலாம் என்ற இடத்தில் மிகச் சிறப்பான முறையில் கொண்டாடினார்கள். தாங்கனிகா நாடு முழுவதும் அந்த விழா கொண்டாடப்படுகிறது. எங்கு பார்த்தாலும் கண்ணைக் கவரும் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தலைநகரின் மத்தியில் தேசிய விளையாட்டுத் திடலில் தாங்கனிகா நாட்டின் பச்சை, பொன்நிறம், கருப்பு ஆகிய வண்ணம் கொண்ட தேசியக்கொடியை ஏற்றி வைத்து விடுதலை விழாவைக் கொண்டாடினார்கள். அதுமட்டுமின்றி அந்த நாட்டிலேயே 19,340 அடி உயரமுள்ள மலைச் சிகரமான சினிமஞ்சாரோவிலும் தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

விடுதலை விழாவைச் சிறப்பிக்க 33 நாடுகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. உலகத்தின் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டார்கள். குறிப்பாகக்கென்யா நாட்டின் தலைவர் கென்யாட்டாவும், டாம்மொபாயாவும், பிரிட்டிஷ் கயானா நாட்டின் முதல்வர் செடிஜகன் போன்றவர்களும், இந்தியத் துணைக்கண்டத்தின் வெளி விவகார இலாகாவின் துணையமைச்சர் திருமதி இலட்சுமி அம்மையாரும் கலந்துகொண்டு வாழ்த்துக் கூறினார்கள். இத்துணைக்கண்டத்தின் பிரதமர் பண்டித நேரு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

பிரிட்டிஷ் மகாராணியார் எலிசபத் சார்பில் அவரது கணவர் பிலிப் இளவரசர் விடுதலைச் சாசனத்தை முதலமைச்சர் நைரேர் அவர்களுக்கு வழங்கினார்.

சின்னஞ் சிறிய நாடான தாங்கனிகா விடுதலை பெறுகிறது என்றால் வாழ்த்துச் செய்தியனுப்புகிற நேரு ஜனநாயகத்தின் மொத்த உருவமாக உலகத்தார் கண்ணிலே காட்சியளிக்கிறார்.

ஆனால், இழந்த நாட்டை, அடிமைப்பட்ட தங்கள் நாட்டை மீட்கநினைக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்டு மட்டும் சீற்றமடைகிறார். "உள்நாட்டுக் கலகமே வந்தாலும் நாட்டுப் பிரிவினைக்கு ஒத்துக்கொள்ள மாட்டேன்" என்று மிரட்டுவதன் மூலம் ஜனநாயகத்துக்கு முழுக்கும்போட்டுவிட்டுப் பாகிஸ்தான் பாதையில் போகிறாரோ பண்டிதர் என்ற ஐயம்தான் நமக்கு ஏற்படுகிறது. எத்தனை நாளைக்கு இந்த ஏமாற்று வித்தை? அறவழியிலே செல்லும் எவருக்கும் வெற்றி உறுதி என்பதுதான் தாங்கனிகா காட்டும் பாடம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

ணங்கள் கருவிருந்தன அவன் இதயத்தில்.

பூட்டுச் செய்து முடித்த அன்றிரவு...

"நீ இன்று என்ன செய்தாய் என்று உனக்குப் புரிந்ததா"—இப்படி அவன் இதயம் அவனைக் கேட்டது.

"திருடனிடமிருந்து பொருள்களைக் காப்பாற்றி இருக்கிறேனே"–அவன் அறிவு பேசிற்று பெருமிதத்துடன்!

"நீ புதிய கண்டுபிடிப்பு ஒன்றினைச் செய்து, அறிவியலில் புதிய திருப்பத்தைச் செய்தாய் என்பது உண்மைதான். ஆனாலும், அதனை ஒட்டி, வாழ்வியலில் ஏற்படட இருக்கும் மாபெரும் தீமை பல நூறாண்டுகள் சென்றாலும், ஏன், உலகமே அழியும் வரை நிமிர்த்தமுடியாது போய்விடும் என்பதை நீ ஏன் உணரவில்லை?"—இதயம் இப்படிக் கடாவியது.

"புரியவில்லையே..."—அறிவு.

"கேள்! புதிய கருவியாம் பூட்டுச் செய்தாய்! அறிவு மிக்கவன்—அதற்காகப் பாராட்டத்தக்கவன் தான். ஆனாலும், 'திருடனைத்' திருத்த அதுவா, வழி? எவ்வளவு ஆர்வத்துடன் எத்தனை பேர் பூட்டுகளை வாங்கிச் சென்றனர்? அவர்கள் உன்னை 'அறிவாளி, அறிவாளி' என்று ஆராதித்தனரே! அவர்களது அந்த ஆர்வமும், உன் அறிவும் சேர்ந்து அத்தகைய திருட்டே இல்லாதுபோக — திருடவேண்டிய சூழ்நிலையே ஏற்படாதிருக்க வழியொன்று செய்யாது போய்விட்டீர்களே! திருடர்களை உண்டாக்குவானேன்? திருடர்களைத் தடுக்கப் பூட்டு உண்டாக்குவானேன்? நீ அறிவு மிக்கவன்தான்! புதிய கருவி ஒன்று செய்தவன்தான்! ஆனால் அந்த அறிவு எப்படிப் பயன்பட்டிருக்கிறது பார்த்தாயா?" என்றது இதயம்.

அவனது புருவம் ஒன்றன்மேல் ஒன்று ஏறிக்கொள்வதுபோல நெரிந்து சுருங்கின! — கண்ணீர் துளிர்த்தது!

"ஏன் கண்ணீர்?"

"என் தவறை உணர்ந்தேன்!"

"காலம் கடந்து கண்ணீர் வடிக்கிறாய்...மனிதர்களுக்குள்ளே செல்வர், திருடர் என்று பிரிவை உண்டாக்கிவிட்டாய்! அவர்கள் இவர்கட்கு எதிரிகள் என்றும், இவர்கள் அவர்கட்கு விரோதிகள் என்றும் செய்தாய். கைகோர்த்து உலவ வேண்டிய மனித இனம், இனி தமக்கிடையே பெரும் பள்ளம் இருப்பது தவிர்க்கமுடியாது என்ற மாயைக்கு வித்திட்டுவிட்டாய். பூட்டை நம்பிச் சிலரும், பூட்டை வெறுத்துச் சிலரும், வாழ்வார்கள் இனிமேல். 'எனது, உனது' என்ற சொற்களுக்கு வேகத்தையும் வெறியையும் ஊட்டிவிட்டாய். இப்போது நீ கண்ணீர் விட்டு என்ன பயன்? நீ செய்த பூட்டைக்கொண்டு செல்வர்கள் பயமின்றி வாழப்போவதில்லை; நீ செய்த பூட்டைக் கண்டு திருடர்கள் திருந்திவிடப் போவதில்லை என்பது மட்டும் நிச்சயம். செல்வர்களும் இனியும் பறிகொடுப்பர். திருடர்களும் இனியும் பெருகுவர். நீ வடிக்கும் இந்தக் கண்ணீர், இனி மனித சமுதாயத்தின் நீங்காத சொத்து! அவர்களது உரிமைப் பொருள். நீ செய்த பூட்டு, போராட்டம், வர்க்க பேதம், முதலாளி தொழிலாளி, ஆகிய பகையுணர்ச்சிகளால் அழியப்போகும் உலகுக்கு முதற்பதிப்பு!..." என்றது அவனது இதயம்.

பூட்டுச் செய்தவன் திக்குமுக்காடிப்போனான்;

பூட்டற்ற புத்துலகம் காணத் துடித்தான் அந்தப் பூட்டுச் செய்தவன்.

❋


## "திராவிட நாடு"

# பொங்கல் மலர்

## விலை ரூபா 1--50

**இவ்வாண்டுப் பொங்கல் மலர் மிகச் சிறந்த முறையில் வெளியிட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.**

**விற்பனையாளர்கள், தங்களுக்குத் தேவைப்படும் மலரின் எண்ணிக்கை விபரத்தை முன்னதாகவே 25-12-61-க்குள் தெரிவிப்பதுடன், மலர் ஒன்றுக்குக், கழிவு நீக்கி ரூபா 1—15 வீதம், 28-12-61-க்குள் அனுப்பிவைக்கவும்.**

குறிப்பு:—பழைய பாக்கி முழுவதும் அனுப்பாதவர்களுக்கு மலர் கண்டிப்பாக அனுப்பப்படமாட்டாது.

### சந்தாதாரர்கள் கவனத்துக்கு

இவ்வாண்டுப் பொங்கல் மலரின் விலை ரூ. 1—50 ஆகும். முன்பணமாக ரூ. 1—50 அனுப்புகின்ற சந்தாதாரர்களுக்கு மட்டும்தான் மலர் பதிவுத் தபாலில் அனுப்பப்படும்.

**—பொறுப்பாளர்.**

# "பைத்தியர்"

—[சே. தமிழ்க்கூத்தன்]—

அவன் ஓடினன்......ஓடினன்...... ஓடிக்கொண்டே இருந்தான். எதற்காக? பந்தயத்தில் வெற்றி பெற்றுப் பரிசு பெறுவதற்கா? அல்லது, மறந்து விட்டுவந்த பொருளை ஓடிப்போய் எடுத்து வரவா?

எண்ணெயின்றிக் காற்றில் பறக்கும் கலைந்த தலை, வளர்ந்த இளந் தாடி, அழுக்குப்படிந்த உடை,இத்தியாதி கோலத்தோடு காட்சியளிக்கும், அவனுக்கே தெரியாது, தான் எங்கே ஓடுகிறேன் என்பது. அவனது ஓட்டத்திலே, மிடுக்கோ வேகமோ இல்லை. கால்கள் தளர்ந்து தள்ளாடின. அவனது கால்களைப் போலவே, உள்ளமும் வலிவற்றுத் தளர்ந்து இருந்தது. உதடுகள் மட்டும் ஐயோ......செல்லம்!.... செல்லம்...! என அழைத்துக்கொண்டே இருந்தன.

*

டாக்டர் ஐயா......! கொஞ்சம் கருணைகாட்டுங்க ஐயா...!

ஏம்பா...! தொந்தரவு செய்யறே, பணம் கொண்டுவந்திருக்கிருயா?

கொண்டுவந்திருக்கிறேனுங்க....!

எவ்வளவு கொண்டுவந்திருக்கிருய்...?

முப்பது ரூபாய் இருக்குதுங்க.....

பாக்கி எங்கே...? நான் நூறு ரூபாய்க்குக் குறைந்து ஆபரேசன் செய்வதில்லை. முன்னலேயே கண்டிப்பாய் சொன்னேனே...!

ரொம்ப, ஏழைங்க, கூலி வேலை செய்து பிழைக்கிறவனுங்க—தரும எசமான் என் மொகத்தைப் பார்க்கணும்.

என்னல் முடியாது, நீ, ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போ, அப்பொழுதுதான் அதனுடைய அனுபவம் உனக்குத் தெரியும்.

இந்த ரூபாயை வாங்கிகிட்டு என்க்கு, நீங்க இந்த உதவியைச் செய்தா, என் உயிர் உள்ளவரை மறக்கமாட்டேனுங்க — தயவு செய்யுங்க எசமான்...!

இந்த உரையாடல், வேலப்பனுக்கும், டாக்டர் நாகநாதனுக்கும் நடந்துகொண்டு இருக்கும்போது, தெருவில் கார் ஒன்று வந்து நின்றது. அந்தக் காரிலிருந்த டிரைவர் இறங்கி வந்து, "உங்களைப் பெரிய பண்ணைஐயா,அழைத்துக்கொண்டு வரசொன்னுங்க, அம்மாவுக்கு உடம்பு சரியில்லையாம்," என்ருன்.

டாக்டர், மருந்துப்பெட்டியை எடுத்து டிரைவரிடம் கொடுத்து விட்டு, நாடிக் குழாயை கையில் எடுத்துக்கொண்டு, காரில் ஏறிச் சென்றுவிட்டார்.

அடர்ந்த காட்டில் நல்ல மையிருட்டில் சிறு விளக்கின் உதவிகொண்டு முன்னேறிக்கொண்டிருக்கும், ஒருவனுக்கு, (அதுவும் இரவு நேரத்தில் கண்தெரியாதமஞ்சக்காமாலைக்கண் கொண்டவனுக்கு) திடீரென்று வேகமாகக் காற்றடித்து அந்த விளக்கும் நின்றுவிட்டால்......? இதுபோன்றுதான் வேலப்பனின் நிலை, ஆகியது. சுயநினைவிழந்து மரம்போல் நின்று கொண்டிருந்தான்.

*

செல்லம், வேலப்பனின்வாழ்க்கையிலே பங்குகொண்ட பின்பு அவனுக்கு நம்பிக்கை ஒளி வீசியது. உலகத்து அன்பை எல்லாம் கொட்டி அவள்மீது பாசம் காட்டினன். உலகத்தில் தனக்கு யாருமே உறவில்லையே, இப்படித் தனி மரமாக இருக்கிறேமே எனப் பல நாள் கவலைப்பட்டிருக்கிருன். இந்த எண்ணமெல்லாம், செல்லம்மாளின் வருகைக்குப் பின்பு, ஆடிக்காற்றில் அகப்பட்ட பஞ்செனப்பறந்தது.

வெளியில் சென்று உழைத்து அலுத்துக் களைப்புற்று வரும் வேலப்பனுக்கு, தன் குன்றனைய அன்பின் பராமரிப்பினல் களிப்பூட்டிவந்தாள் அவள். எனவே, அவன் தன்னை இன்பபுரியின் வாரிசாகக் கருதினன்.

"வாழ்க்கையில் ஒருவனுக்கு ஒப்பற்ற மனைவியும் உற்ற நண்பனும் கிடைப்பது என்பது சாமான்யமா? ...அதுபோல் கிடைத்துவிட்டால்... மாமலையென வரும் துன்பமும் சிறு கடுகாகத்தானே தோன்றும் மனிதனுக்கு..." வேலப்பனின் மகிழ்ச்சியில் வியப்பில்லைத்தான்...!

வேலப்பனின் மகிழ்ச்சி இரட்டிப்பாவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. மகிழ்ச்சியின் எல்லையிலே நின்று களித்துக்கொண்டிருந்தான் அவன். அவன் ஒரு தந்தையாகப்போகிறன் என்பதுதான் அம்மகிழ்ச்சிக்குக்காரணம்! அகத்திலே ஏற்பட்ட மகிழ்ச்சியை, அவன் என்னவிரும்புகிருன் என்பதை எல்லாம் அறிந்து புறப்பொருள்களாலே விளக்கிக்கொண்டிருந்தான்.

நாட்கள் வேகமாக ஓடி மறைந்தன. செல்லம்மாள், தாய்மை அடைந்து ஒன்பது திங்கள் மறைந்து, பத்தாவது மாதத்தை எட்டிப்பிடித்தாள். அம்மாதத்தின் இறுதியில் ஓர் நாள், செல்லம்மாள் இன்பவேதனைப் பட்டுக்கொண்டிருந்தாள். ஆம்; எதிர்கால ஒரு அறிஞனையோ! கவிஞனையோ! விஞ்ஞானியையோ தோற்றுவிக்க முயன்றுகொண்டிருந்தாள்.

நமக்குப் பிறக்கப்போவது ஆண் குழந்தையாக இருக்குமா? பெண் குழந்தையாக இருக்குமா? ஆண் குழந்தையாக இருந்தால் என்னைப் போல் இருக்கும், பெண்ணுக இருந்தால் செல்லத்தைப்போல் இருக்கும். எந்தக் குழந்தையாக இருந்தாலும் செல்லம்மாளைப் போலவே இருப்பது நல்லது. அப்பொழுதுதான் குழந்தை நல்ல அழகாக இருக்கும். இந்த இன்பக்கனவில் திளைத்தவாறே வெளியில் அமர்ந்திருந்தான் வேலப்பன்.

நிலைமை மிகவும் சோசமாக இருக்கிறது. ஆஸ்பத்திரிக்குப்போய்த்தான்

ஆகவேண்டும் என்று, வேலப்பனி டம் அக்கம்பக்கத்தவர்கள் கூறவே, உடனே, வண்டி ஒன்று பிடித்து அதன்மூலம் செல்லம்மாவை ஆஸ் பத்திரிக்கு அழைத்துச் செல்லப் பட்டது.

டாக்டர் அவளைப் பரிசோதித்து ஊசி மருந்து ஒன்று எழுதிக்கொடுத் தார். அதை வேலப்பன் மருந்துக் கடைக்குச் சென்று வாங்கிவந்தான். மருந்தை ஊசியின்மூலம் செலுத்தி னுர் டாக்டர்.

சிறிது நேரம் சென்று, டாக்ட ரிடம்போய்நிலைமையைவிளக்கினுன் வேலப்பன். எனக்கு நேரம் தெரி யும், அப்பொழுது பார்ப்பேன், நீபோ என்று கூறியபின் வந்தான். நிலைமை மிகவும் மோசமாகப் போகவே, மற்றொரு முறை சென்று அறிவுறுத்தினுன்.

டாக்டருக்கு கோபம் வந்துவிட் டது.

ஒரு தடவைசொன்னுல் புரியாது! ஏனய்யா......! தொந்தரவு செய் யறே எனக்கூறி அலுத்துக் கொண்டு வேண்டா வெறுப்பாகப் போய்க் கவனித்தார்.

பரிசோதித்துப் பார்த்து, மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறது, ஆபரேஷன் செய்துதான் குழந் தையை எடுக்கவேண்டும். அப்படி ஆபரேஷன் செய்யவேண்டுமானுல் நூறு ரூபாய் பணம் வேண்டும் எனக் கூறினுர் டாக்டர்.

ஐயா...! நான் மிகவும் ஏழைஐயா! நூறு ரூவாய்க்கு எங்கே போவேன். என் பொண்டாட்டியை எப்படி யாவது காப்பாத்திடுங்க சாமி, பின் னுலே சம்பாதிச்சி—எப்படியாவது கொஞ்சம் கொஞ்சமாகக் குடுத்திடு றேன். இந்த உதவியைச் செஞ்சீங் கண்ணு என் உடலிலே உசிரு இருக்கிறவரை மறக்கவே மாட் டேன்.

அதெல்லாம் எனக்கு ஒன்றும் தெரியாது. நூறு ரூபாய் இருந்தால், மாலை மூன்று மணிக்கு ஆபரேஷன் செய்வேன்.

தன்னுடைய குறைந்த வருவாயில் பிரசவத்திற்குப் பயன்படும் என எண்ணி, ஒரு காசு இரண்டு காசா கச் சேர்த்து ஐந்து ரூபாய் வைத் திருந்தான். அந்தப் பணத்தில் வண்டி வாடகை எட்டணுவும், மருந்து வாங்கியது மூன்று ரூபா யும், போக மீதம் ஒன்றரை ரூபாய் வைத்திருந்தான். ஒரு பக்கம் நூறு ரூபாய் தேவையும், மறுபக்கம் செல் லத்தின் உயிருமாக மாறி மாறி அவன் சிந்தனையில் தோன்றிஅவனை அலைக்கழித்தது. செய்வதறியாது விழித்தான். திடீரென அவனுக்கு உற்சாகம் பிறந்தது, மனைவி போட் டிருந்த 'காதணி' நினைவுக்கு வந் தது. ஆ...! அதுதான் சரி! அதை விற்ருல் ஏதாவது பணம் தேறும். ஆபத்துக்கு உதவாத நகை வேறு எதற்கு இருக்கிறது? அவனுடைய மூளை வேலை செய்தது.

எண்ணியதைச்செயலாக்கினுன். ஆனுல் அந்தப் பணம் போதுமான தாக இல்லை. நகையை விற்றதில் அவனுக்கு கிடைத்த பணம் மூப்பது ரூபாய். இந்தப் பணத்தைக் கொடுத் தாவது, டாக்டரின்கையைக் காலைப் பிடித்து எப்படியாவது ஆபரேசன் செய்ய ஒப்புக்கொள்ள வைக்க வேண்டும் என்று எண்ணியவாறே டாக்டரின் வீடு நோக்கி நடந்தான். நடுக்கடலிலே தத்தளித்துக்கொண் டிருந்த ஒருவனுக்கு ஒரு சிறு புணை கிடைத்தாற்போன்று சற்று ஆறுத லடைந்தான்.

டாக்டரைச் சந்தித்து விபரம் கூறி மன்ருடினுன். இருந்தும் அந்தக் கல் நெஞ்சுக்காரர் இரங்கவில்லை. வேலப்பனை அலட்சியம் செய்துவிட் டுப் பெரிய பண்ணை வீட்டுக்குச் சென்றுவிட்டார்.

அவன் செய்வதறியாது திகைத் துக் குழம்பினுன். அளவுக்கு மீறிய வேதனையும் ஆத்திரமும் கொண் டான். உலகமே சுழன்றது. அவனை யாரோ கடலில் தூக்கி எறிவது போன்ற பிரேமை ஏற்பட் டது நிலைமையைச் சமாளித்துக் கொண்டு ஆஸ்பத்திரி நோக்கி நடந் தான்.

யாரைக் காப்பாற்ற வேண்டும் என்று ஓடினுனே, அந்த உயிர், அவனது மனைவி, அவனுடைய இருண்ட வாழ்விலே ஒளி பரப்பிவந்த இல்லற ஒளி, அணைந்துவிட்டது என்பதை அறிந்தான். மோதிக் கொண்டான், கதறினுன், புலம்பி னுன். நடமாடும் தெய்வமாக, உற்ற துணையாக, பெறற்கரிய் பொரு ளாக,யாரைப்போற்றிமகிழ்ந்தானே, அவள்! அவன் மனைவி, அவனை விட்டு நெடுந்தூரம் பறந்துவிட்டாள். தனது அன்பு மனைவியின் சடலத் தின்மீது வேலப்பன் புரண்டு அழு ததைக் கண்ணுற்று அங்குள்ளோர் அனைவரும் அனுதாபப்பட்டனர்.

திடீரென்று அவனது அழுகை நின்றது. இடிஇடியெனச் சிரித் தான். செல்லம்...! என்னை விட்டு விட்டு ஓடிவிடவா பார்க்கிறுய்? அது தான் முடியாது......! முடியாது...!! ஆஸ்பத்திரியைவிட்டு வெளியே ஓடினுன்......வழியெல்லாம். செல் லம்...! செல்லம்!! எனக் கூவிய வாறு ஓடிக்கொண்டே இருந்தான்.

★

## "HOMELAND"

—[0]—

**ஆங்கில இதழ் வெளியிடுவதற்கு உரிய பேப்பர் கோட்டா இன்னும் கிடைக்காததால், தற்காலிகமாக இதழ் நிறுத்தப்படுகிறதென்பதை விற்பனையாளர்களுக்கும், வாசகர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேம்.**

பொறுப்பாளர்,
"HOMELAND"

# புதிய பாதை

—[சின்னு. இராமசாமி]—

அம்பலவாணர் என்ற அந்தப் பணக்காரரைப் பற்றி அறியாதார் அப்பகுதியில் யாருமில்லை. சிறந்த சிவபக்தர்! ஆம்! அப்படித்தான் எண்ணத்தோன்றும் அவர் உடல் ஒப்பனையைக் கண்டதும்! ஆனால் உள்ளமோ... அந்த ஒப்பனைக்கு முற்றிலும் மாறுபட்டது! பணம் என்ற பலத்த திரைக்குப் பின்னாலே அந்தப் பரம பக்தர்—பசுத்தோல்போர்த்திய புலி...செய்து கொண்டிருந்த பழிச்செயல்கள் எத்தனையோ...! பாவையர் விளையாட்டிலே 'பலே' பட்டம் பெற்ற அந்தப் பகல் வேடந்தாங்கியின் வலிய கரத்தால் கசக்கி எறியப்பட்டுக் கருகிப் போன மலர்களுக்குக் கணக்கே இல்லை...!

ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் தந்தையான அவர், மனைவியை இழந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டிருந்தன. பையன் பட்டணத்திலே படித்துக்கொண்டிருந்தான். பெண்-செல்வி, பள்ளி இறுதிவகுப்போடு படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டவள்! பருவ விளிம்பைத் தாண்டி நின்ற பண்பரசி! செல்வக் குடியில் பிறந்தும், செல்வச் செருக்கால் ஆட்கொள்ளப்படாதவள்! எளியோரிடம் இரக்க சிந்தையும் இடைவிடாத பேரன்பும் கொண்டவள், சுருக்கமாகச் சொல்லப்போனால், அந்தக் கொடியவனின் உள்ளமெனும் கடலிலே தோன்றிய குளிர் முத்துத்தான் செல்வி! செல்வி மட்டும் இரக்க சிந்தை இல்லாதவளாயிருந்திருந்தால், கணவனை இழந்த வேலம்மாள் — அந்த இளம் விதவை — அந்த வீட்டுக்கு வேலைக்காரியாக வந்திருக்க முடியாது!

மானத்தோடு வெளியே சென்று வாழமுடியாத இளமையில், துணையிழந்து அனாதையாக நின்றபோது, தன் வீட்டிற்கு அழைத்து வந்து வாழ்வளித்த அந்த வனிதாமணியை —செல்வியை வேலம்மாளின் ஏழை உள்ளம் தாயாகவே கருதியது! செல்வி, வேலம்மாளை வேலைக்காரியாக நினைத்ததே இல்லை! அந்த வீட்டுக்குரியவர்களுள் அவளையும் ஒருத்தியாகவே நினைத்து மதித்து வந்தாள்!

செல்வி, பெயருக்கேற்றபடி எல்லாச் செல்வங்களையும் பெற்றிருந்த போதிலும், நெடு நாட்களாக அவள் உள்ளத்தை ஏதோ ஒன்று உறுத்திக்கொண்டே இருந்தது. அந்த உறுத்தலுக்குக் காரணம் இல்லாமலில்லை! எல்லாம் அவள் தந்தையைப் பற்றிய கவலைதான்! தன் தந்தையைப்பற்றி ஊரார் பேசும் பேச்சுக்களை அவள் அறியாதிருந்திருந்தால், கவலைப்பட்டிருக்கமாட்டாள்! உண்மையை அறிந்த அவள் —ஊர் வாயை ஊமையாக்க முடியாத அவள்—ஓயாது நினைத்து நினைத்து உருக்குலைந்து, தன் உள்ளத்தையே ஒரு வேதனைக் குளமாக்கிக் கொண்டிருந்தாள்! தவறுகளைச் சுட்டிக்காட்டித் தந்தையைத் திருத்துவதற்காக அந்தத் தன் மானம் மிக்கவள் முயன்ற நாட்கள் பல! ஆனால்...! பெண்மை அவள் முயற்சியைத் தோற்கடித்துக் கொண்டே வந்தது! அதற்காக அவள் தளர்ந்துவிடவில்லை! தன் தந்தையை எப்படியாவது நல்ல வழிக்குக் கொண்டுவந்துவிட வேண்டுமென்பதையே குறிக்கோளாகக் கொண்டு, அதற்காகவே அந்த வாழ்க்கையில் இயங்கிக் கொண்டிருந்தாள்! அதற்கான காலமும் அவளுக்குக் கிட்டாமல் போகவில்லை!

அன்று இரவு உணவுக்குப் பின் செல்வி மாடியில்—தன் அறையில் ஏதோ புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்துவிட்டு அப்படியே கண்ணயர்ந்துவிட்டாள்! கீழே—வேலம்மாள் தன் அறையில் விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக் கொண்டாள். வேலம்மாளின் அறைக்கு நேர் எதிர்ப்புறத்தில்தான் அம்பலவாணரின் அறை! அமைதி நிலவிக்கொண்டிருந்த அந்த வீட்டில், அம்பலவாணர் மட்டும் பதினொரு மணிக்கு மேலாகியும் தூக்கத்தை வெறுத்தவராய்ப் பஞ்சணையில் புரண்டுகொண்டிருந்தார். நெடு நாட்களாகவே வேலம்மாளைப்பற்றி அவர் உள்ளத்தில் இருந்த எண்ணம் அன்று மிகவும் வேகமாகப் பீறிட்டெழுந்தது! எழுந்தார்...! கால்கள் வேலம்மாளின் அறையை நோக்கி நடந்தன! கதவருகில் நின்று கொண்டு மெதுவாகக் குரல் கொடுத்தார்!

“வேலம்மா... வேலம்மா...!”

“.........” பதிலில்லை!

“வேலம்மா...” மீண்டும் குரல்!

அரைத்தூக்கத்திலிருந்த வேலம்மாள் “யாரது?” என்று கேட்டுக் கொண்டே படுக்கையிலிருந்து எழுந்தாள்.

“ஏன் வேலம்மா... நான்தான்!”

இந்தக் குரலைக் கேட்டதும் எஜமானருக்கு ஏதாவது வேண்டியிருக்கும் என்று நினைத்த வேலம்மாள்—அந்த விசுவாசமுள்ள வேலைக்காரி கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள்.

“என்னங்க எஜமான்! இந்நேரத்தில்?”

“ஏன்...! நல்லநேரந்தானே?”

“ஏதாவது தேவையா எஜமான்.........”

“ஆம்...”

“சொல்லுங்க எஜமான்......!” அந்த ஏழைக்குரல் கேட்டது!

“இந்த நேரத்தில் என்ன தேவையாயிருக்கமுடியும் வேலம்மா...!”

“சற்றுப் புரியும்படி...!”

“நீ தேவை...”

எதிர்பாராத இந்த வார்த்தையைக் கேட்டதும் எத்தனையோ சம்மட்டி கொண்டு இதயத்தைத் தாக்கியது போன்ற அதிர்ச்சியடைந்தாள் வேலம்மாள்! உள்ளம் தடுமாறியது! உடல் நடுங்க ஆரம்பித்தது! பேச்சுக் குழறியது!

“எஜமான்...! வேலைக்காரிதானே என்று நினைத்தீர்களா...?”

“இல்லைக் கண்ணே! வீட்டுக்காரி என்று......”

"போதும் எஜமான்! போதும்! இதற்காகத்தான் இந்த அனுதைக்கு ஆதரவு காட்டினீர்களா? ஐயோ எஜமான்! இந்த இழிசெயல் தகாது எஜமான்! போங்கள், போய்விடுங்கள்! ஐயோ...!" கதறினுள் அவள்!

"போகிறேன்! என்னைப் புரிந்துகொள்! நாளை உன் நல்லமுடிவை எதிர்பார்க்கிறேன்" அறையை நோக்கி நடந்தார் அம்பலவாணர்!

வேலம்மாள் தடுமாறிக்கொண்டே மாடிப்படியில் ஏறினுள், செல்வியின் அறையை அணுகிச் செல்வியை எழுப்பினுள்! செல்வி எழுந்து விளக்கைப் போட்டுக்கொண்டே கதவைத் திறந்தாள் "செல்வி!" கதறிக்கொண்டே அவளைக் கட்டி அணைத்துக்கொண்டாள் வேலம்மாள்!

"என்ன வேலம்மா! ஏன் அழுகிருய்? ஏதாவது கனவுகண்டாயா......?" பதட்டத்தோடு கேட்டாள் செல்வி!

"......" தேம்பித் தேம்பி அழுதாள் வேலம்மாள்!

"என்ன வேலம்மா! சொல்லு! என்ன நடந்தது...?"

"ஒன்றுமில்லையம்மா...!"

"வேலம்மா பொய் சொல்கிருய்! உண்மையைச் சொல்லப்போகிருயா இல்லையா?" குரலில் சற்று அதிகாரம் தொனித்தது.

"அம்மா சொல்கிறேன்! உன்னிடம் சொல்லாமல் நான் வேறு யாரிடம் சொல்லமுடியும்? சொல்கிறேனம்மா...அப்...பா....என்னை விரும்புகிருர்...!" அதற்குமேல் அவளால் பேசமுடியவில்லை! இந்த வார்த்தையைக் கேட்டதும் செல்வி சிலையானுள்! இரத்த ஓட்டமே ஒருகணம் நின்றுவிட்டது...!

"வேலம்மா...!" செல்வி வேதனையோடு வேலம்மாளின் முகத்தை நிமிர்த்தினுள்!

"ஆமம்மா! நாளை...என்னுடைய முடிவை எதிர்பார்க்கிருர்..." படுக்கையில் குப்புற விழுந்தாள் வேலம்மாள்! செல்வி விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கையை அடைந்தாள்! செல்வியின் சிந்தனை சின்னுபின்னமாகக் குழம்பியது! வெளியில் விளையாடிய தந்தை,வீட்டுக்குள்ளும் விளையாட எண்ணியதை நினைத்தாள்! எண்ணங்கள் எப்படியெப்படியோ வலைபின்ன ஆரம்பித்தன! அந்த இரவு முழுவதும் செல்வி சிந்தித்துக்கொண்டே இருந்தாள்! இடையிடையே வேலம்மாளின் விம்மல் ஒலி செல்வியின் சிந்தனையைக் கலைத்துக்கொண்டிருந்தது!

பொழுது விடிந்தது. செல்வியும் வேலம்மாளும் வழக்கம்போலவே வீட்டு வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினர். காலையில் வெளியில் புறப்பட்ட அம்பலவாணர் மாலையில் வீடுவந்து சேர்ந்தார்! இரவு உணவுக்குப் பின் அம்பலவாணர் தன் அறைக்குச் சென்றுவிட்டார்! செல்வி வேலம்மாளை அழைத்துக்கொண்டு தன் அறைக்கு—மாடிக்குச் சென்ருள்!

"வேலம்மா...!"

"என்னமம்மா"

"இந்த வீட்டிற்கு உன்னை நான் அழைத்துவந்தேன்...! உனக்கு எந்தவிதத்திலும் தீங்கு நேராமல் பாதுகாப்பது என்கடமை! எனவே, நீ எந்தக் கவலையுமின்றி என்னுடனேயே இருந்துவிடு! இந்த அறையை உன் சொந்த அறையாகவே நினைத்துக்கொள்! உனக்கு எந்தவிதத்திலும் இனித் துன்பமே இருக்காதம்மா! நிம்மதியாக இரு! அப்பாவின் வார்த்தைகளை மறந்துவிடு......!"

ஆதரவும் அன்பும் அந்தப்பேச்சில் இழைந்திருந்தது! கண்களிலிருந்து இரண்டு கண்ணீர் முத்துக்கள் நிலத்தில் வீழ்ந்தன...! வேலம்மாள் பதில் ஏதும் பேசவில்லை. இருவரும் படுத்துக்கொண்டனர்!

கீழே—அம்பலவாணருக்கு உறக்கம் கொள்ளவில்லை! அந்த உதவாக்கரை எண்ணம் மீண்டும் உருவெடுத்தது! சுவரில் மாட்டியிருந்த மணிப்பொறி பதினெருமுறை ஒலித்து ஓய்ந்தது. வேலம்மாளின் அறையை அடைந்தார் அம்பலவாணர்! கதவு தாழிடப்பட்டிருந்தது!

"வேலம்மா...!! மெதுவாகக் கதவைத் தட்டினுர்! கதவு திறக்கப்பட்டது!

"என்ன வேலம்மா...! இஷ்டந்தானே...?!! உள்ளே நுழைந்தார் அம்பலவாணர்!

"அப்பா...!" அந்த அனுதாபக் குரல் அழைத்தது!

தீயை மிதித்தவர்போல் தடுமாறினுர் அம்பலவாணர்! தடுமாற்றத்துடனே...சுவரைத் தடவிப் பார்த்து விளக்கைப் போட்டார்!

"செல்வீ...!" அலறிக்கொண்டே கண்களை அகல விரித்தார் அம்பலவாணர்!

"ஆம்...அப்பா...! உங்கள் மகள் செல்விதான்...!"

"சீ...! நீ ஏன் இங்கு வந்தாய்...? போ வெளியே..."

"போகிறேன் அப்பா...! போகிறேன்......வெளியே என்ன...இந்த விபரீத உலகை விட்டே போய்விடுகிறேன்...! போகுமுன்...!" கீழே சாய்ந்தாள் செல்வி! இடுப்பில் செருகியிருந்த காகித மடிப்பொன்று கீழே விழுந்தது...! கை நடுக்கத்துடன் அந்தக் காகிதத்தை எடுத்துப் பிரித்தார் அம்பலவாணர்!

"அப்பா...! உங்கள் செல்விதான் பேசுகிறேன்...! உங்களை என்றைக்கோ....புரிந்துகொண்டேன்...அப்பா! வெளியே சொல்லமுடியாமல் இவ்வளவு நாளும் வேதனைப்பட்டுக்கொண்டிருந்தேன்...! ஆனல்...! நேற்றிரவு......நா கூசுகிறதப்பா...! மாதர்குல மாணிக்கத்தை...அந்தப் பேசும் பொற் சித்திரத்தை...மாசுபடுத்த நினைத்தீர்...! பெண் குலத்தைப் பேயாக்க நினைப்பது உங்களைப்போன்ற பெரிய மனிதர்களுக்கு...அழகல்ல அப்பா...! நீங்கள்...திருந்துங்கள்...! அந்த வேலைக்கார உத்தமியை...... வாழவைக்கவேண்டிய பொறுப்பு இனி...உங்களைச் சார்ந்தது...! ஆமப்பா...! அவளை என் அண்ணனுக்குத் திருமணம் செய்து வைத்து அவள் வாழ்வை வளமாக்குங்கள்...! அவளை... உங்கள் மருமகளாக ஏற்றுக்கொள்ளுங்கள்! அவர்களுக்குப் பிறக்கும் செல்வங்களை...திருந்தாத இந்த நாட்டின் சீர்திருத்தப் பணிக்கு அனுப்புங்கள்...! என்னுடைய எண்ணங்களை...எதிர்காலத்தில் நிறைவேற்றுங்கள் அப்பா......!"

கடிதத்தை முடித்தார்...கண்ணீரைத் துடைத்துக்கொண்டே செல்வியைப் பார்த்தார் அம்பலவாணர்...!செல்வி தரையில் புரண்டுகொண்டிருந்தாள்...!

"செல்வி...! என் செல்வமே...! எழுந்திரும்மா...! எழுந்திரு..." செல்வியை வாரி அணைத்துக்கொண்டார் அம்பலவாணர்...!

"அப்பா......!" செல்வி பேசினுள்!

"செல்வி...! இந்தத் துரோகிக்காகவா...நீ இவ்வளவு துன்பப்பட்டாய்...? ... நான் ... நான் ... கண்ணிருந்தும் குருடனுக வாழ்ந்துவிட்டேனம்மா...! ஐயோ......!

"அப்பா...என் ஆசைகளை நிறைவேற்றுவீர்களா...அப்பா...!?"

"செய்கிறேனம்மா...!"

"உறுதியாகச் சொல்லுங்கள் அப்பா......!"

"உன்மீது ஆணையிட்டுச் சொல்கிறேனம்மா...உறுதியாகச் செய்து

(12-ம் பக்கம் பார்க்க)

# இயற்கையின் பரிசு!

— [புதுவை—அருணன்] —

பகலவன் தன் ஒளி முகத்தைக் காட்டி இன்றோடு நான்கு நாட்களாகிவிட்டன. எங்கும் கருமுகிலின் ஆட்சியும்; அது வடிக்கும் கண்ணீருமே நின்று நிலவியது. அலைகடல் மீது சென்று வலைவீசி மீன் பிடித்து, நிலையற்ற வாழ்க்கை நடத்தும் செம்படவர்கள் என்ன செய்ய முடியும்? கையில் இருந்தவற்றைக் கடந்த இரண்டு தினங்களாகச் செலவழித்தேன்; நேற்று நானும் என் குடும்பமும் பட்டினி; நானும் என் மனைவியும் பட்டினியாக இருக்கலாம்; ஆனால் என்னுடைய இரண்டு குழந்தைகள் எப்படிப் பட்டினிகிடக்கும்? என்னுடைய நிலை தான் குழந்தைகளுக்குத் தெரியுமா?

மாளிகையில் வாழும் செல்வச் சீமான்கள் உண்டுகளித்துக் கேளிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் நாளும்! எங்களுடைய அவலக்குரல் ஆளவந்தார்களுக்கே தெரியாதிருக்கும்பொழுது, இன்பத்தில் வாழும் சீமான்களுக்கு, பாழும் ஏழ்மையில் வாழும் எங்களைப் பற்றி எப்படித் தெரியும்? அடுக்கு மாளிகையில் வாழ்பவர்கள், மழையையும் அதன் கொடுமையையுங் கண்டு களிக்கிறார்கள். ஆனால் என்னைப்போன்ற ஏழைகள் "மழையின் கொடுமைக்கு ஆட்பட்டுத் தங்களுடைய குடிசைகள் எங்கு அழிந்துவிடுகின்றனவோ?" என்று கவலைப்படுகின்றார்கள்.

என்னுடைய மக்கள் என் மனைவியை உணவுக்காக நச்சரிக்கும் வேதனைக்குரல் என் இதயத்தைத் தாக்குகிறது. கட்டுமரத்தைக் கட்டிக்கொண்டு கடல்மேல் சென்று மீன் பிடித்து வரலாமென்றாலும், "கடலோ! பல ஆற்றல்மிக்க பேரரசுகளையும், புகழ்பெற்ற நகரங்களையும் அழித்த நான்---சிறு துரும்பாகிய உன்னை அழித்துவிடுவேன்" என்று எச்சரிக்கை விடுப்பதைப்போலக் குமுறிக்கொண்டிருக்கிறது.

இயற்கையை எதிர்த்துப் போராட என்னைப்போன்ற ஏழைகளால் எப்படி இயலும்? கொடூரமாக இரைந்துகொண்டிருக்கும் கடல்மேல் துணிந்து கட்டுமரத்தைச் செலுத்தினாலோ?---அதனுடைய கோரப் பசிக்குப் பலியாக வேண்டியதுதான். அப்படி நான் பலியாக நேரிட்டால், என் குடும்பம் என்னாவது? ஐயோ! நினைக்கவே பயங்கரமாகவன்றோ உள்ளது? என் மனைவியும் மக்களும் அனாதைகளாகவன்றோ வாட நேரிடும்? இப்படிப் பலவாறாக என் மனம், தாமரை இலைமேல் விழுந்த நீர்த்துளிபோல் தத்தளித்துக்கொண்டிருந்தது.

குழந்தைகளின் நச்சரிப்பு அதிகமாகவே என் மனைவி என்னை நோக்கினாள்; நான் என்ன செய்ய?---நான் கடலை நோக்கினேன். கடலோ! பேரிரைச்சலோடு தன் அலைக்கரத்தை நீட்டி, விரைந்து ஓடிவா! உன்னை இறுகத் தழுவி அமைதி என்ற இன்பத்தை அளிக்கிறேன் என்று சொல்லாமல் சொல்லி வரவேற்கின்றது. எங்களுடைய அவலக்குரலைக் கவனிக்க அதிக சிரத்தையோடு ஆளவந்தார்கள் வருவார்கள் தேர்தல் நேரத்தில்; ஓட்டு வாங்கும்வரை எங்கள்பால் அதிக அக்கறை உள்ளவர்கள்போல் நடித்துக்காட்டுவார்கள்; ஓட்டு வாங்கியதும் நோட்டுச் சேர்ப்ம்தற்காக அவர்கள் வழியில் சென்றுவிடுவார்கள், பிறகு எங்களுடைய அவலப் பாட்டு அவர்தம் செவியில் புகுவதில்லை.

அலைகடல்போல் என் மனம் குமுறிக்கொண்டிருந்தது. இவ்வாறு மனக்கடலில் குமுறித் தத்தளிப்பதைவிட, அலைகடல்மேல் சென்று தத்தளித்தாலும், ஏதாவது மீன் கிடைக்கும்---அதை விற்று வயிற்றைக் கழுவலாம். அல்லது பசி வேட்கையால் குமுறிக்கொண்டிருக்கும் கடலுக்காவது உணவாகலாமென்ற எண்ணத்தோடு துணிந்து கட்டுமரத்தைச் செலுத்தினேன் கடல்மேல்.

மனித இனத்தில்தான் ஏற்றத்தாழ்வு இருக்கிறது. ஆனால் இந்தக் கடலிலுமா அந்த ஏற்றத்தாழ்வு இருக்கவேண்டும்! ஏழை, பணக்காரன்---இது மனித இனத்தின் ஏற்றத்தாழ்வு: கடலில்--சின்ன அலை, பெரிய அலை என்ற ஏற்றத்தாழ்வு. ஏழை---அன்பு முகங்காட்டி இனிமையாய்ப் பழகுகிறான்; பணக்காரன்---ஏழையின் குணத்திற்கு நேர்மாறாகக் கொடுமைகள் பல செய்து, தனியே வாழ்கிறான். இதோ கடலில்....... சின்ன அலை என்னை அன்போடு இனிய முகங்காட்டி வரவேற்கின்றது. ஆனால், பெரிய அலை தன் சீற்றத்தைக் காட்டிக் கொடூரமாக வரவேற்கின்றது ----- பணக்காரனைப் போல! பணக்காரனின் ஆதிக்கப் பிடியில் சிக்கிய ஏழை முன்னேறுவது என்பது முயற்கொம்பு! கோரப் பசியால் குமுறிக்கொண்டிருக்கும் பெரிய அலையின் கரத்தில் சிக்கிய நான் மட்டும் பிழைப்பது எப்படி?

எங்களைப்போன்ற ஏழைகள்தான் இப்பாழும் உலகில் வாழும் வகையறியாது அன்றாடம் அழுகின்றார்கள். ஆனால், இந்த வானத்திற்கு என்ன குறை வந்தது? இப்படி அழுதுகொண்டிருக்கிறது! எங்களுடைய அழுகுரல் யாருடைய காதிலும் ஒலிக்காததைப்போல் வானத்தின் அழுகுரலும் ஒலிக்கவில்லையோ? ஏழைகளும் வானமும் ஓர் இனந்தானோ? எங்களுடைய அழுகுரலுக்குச் செவி சாய்ப்பவர்களாக இருப்பவர்கள் பாட்டாளி இனமே! அதோ!... வானத்தின் அழுகுரலுக்கு மனமிரங்கிக் குமுறிக்கொண்டிருக்கிறதே கடல்! "வானமே! உன்னுடைய அழுகைக்குக் காரணம் மனிதரினம், அந்த மனிதரினத்தின் ஒரு பிரிவு என்னை நம்பி வாழுகின்றது. அந்தக் கூட்டத்தை நான் அழவைக்கிறேன்" என்று கடல் சினந்து குமுறிக்கொண்டிருக்கிறதே, நாங்கள் என்ன செய்ய முடியும்? வானமே! நீ அழுவதால் எங்களுக்குக் கிடைத்த பரிசும் பட்டினியும், கடலின் நட்புமுமே! எனவே நீ உன் அழுகையை நிறுத்திவிட்டு நாங்கள் சிரித்துவாழ நீ சிரித்திடுவாய்!

"பட்டினியால் வாடும் என் குழந்தைகள் என்னை நாடும்; நான் பொருளுக்காக என் கணவரை நோக்குவேன். எங்களின் துன்ப நிலைகண்டு அவர் வாடுவார்! நாங்கள் அன்றாடம் தொழுது வாழும் கடலே சினத்தால் குமுறிக்கொண்டிருக்கையில், அவர்தான் என்னசெய்ய முடியும்? இயற்கையை எதிர்த்துப் போராட எங்களைப்போன்ற ஏழைகளால் எப்படி இயலும்? இயற்கை புரியும் இந்தக் கோர ஆட்சியைப்பற்றிப் புரிந்துகொள்ளும் ஆற்றல் என் குழந்தைகளுக்கு உண்டா? என் மக்களின் நச்சரிப்பு அதிகமாகியது. வேதனையைத் தாங்கமாட்டாது கடல்மேல் சென்றுவிட்டாரே மீன் பிடிக்க!

பசியால் இரையைத் தேடி அலைந்துகொண்டிருக்கும் புலியின் கண்ணில் பட்டவர்கள் தப்பமுடியுமா? அதோ! கடலின் பசிக்கு என் கணவர் இரையாகப் போகிறார், பிறகு நாங்கள்

(12-ம் பக்கம் பார்க்க)

# ஆசை காட்டி

முன்னிரவுக் காலம். ஒடுக்கமான அந்தத் தெருவழியெ நான் விரைந்துபோய்க்கொண்டிருந்தேன். அந்தத் தெருவின் முடிவிடத்தைத் தாண்டி ஆள் நடமாட்டம் அதிகமில்லாத ஒரு சந்து வழியே நான் போகவேண்டும். அந்தத் தெருமுனை ஒரே இருள் நிறைவாகக் கிடந்தது. கைவிளக்கின் துணையால் இருளை ஓட்டியவண்ணம் நான் நடந்துகொண்டிருந்தேன். "ஐயோ, என்னை விட்டுவிடுங்கள்! ஐயோ என்னை விட்டுவிடுங்கள்!நான்போகவேணும், நான் போய்விடுகிறேன்!'' என்று ஒரு பெண்குரல் சற்றுத் தொலைவில், பக்கவாட்டிலிருந்து கேட்டது. அந்தக் குரலை எங்கோ கேட்டிருப்பதாக நினைவுக்கு வந்தது. குரல் வந்த பக்கம் உற்று நோக்கினேன்.

தெருக்கோடிக்கு இரண்டு மூன்று வீடுகள் தள்ளி ஒரு சிறிய வீடு. அங்கே மினுக் மினுக் என்று சிறிய கண்ணாடி விளக்கொன்று ஒளி காட்டிக்கொண்டிருந்தது. அந்த மங்கிய ஒளியினூடே, அங்கே—தாழ்வாரத்தில் நான்கு பேர் நின்றுகொண்டிருப்பது மங்கலாகத் தென்பட்டது. கூச்சல் கிளப்பியவாறு பெண்ணொருத்தி உட்கார்ந்த நிலையிலிருந்து எழுந்து நிற்க முயன்றுகொண்டிருந்தாள். அவளை எழவொட்டாமல் வேறொருத்தி தோளைப்பற்றி அழுத்திக் கொண்டிருந்தாள். எதிரில் நின்ற ஆண்மக்களிருவரும் தணிவான குரலில் ஏதோ கூறியவண்ணம் அதட்டி மிரட்டிக்கொண்டிருந்தார்கள். அந்தப் பெண் திமிறித் திமிறி எழ முயன்றுகொண்டிருந்தாள். திரும்பத் திரும்பக் கூச்சல் கிளப்பிக்கொண்டிருந்தாள்.

ஆமாம், இந்தப் பெண் இங்கே எப்படி வந்தாள்?

சேவூர் இரயில் நிலையம் புதுப்பிக்கப்பெறும் வேலை நடந்துகொண்டிருந்தது. அந்த வேலையில் ஆண்களும், பெண்களுமாகப் பலர் ஈடுபட்டிருந்தனர்;—வெளியூர்களிலிருந்தும், சுற்றுப்புறங்களிலிருந்தும் வந்து, அங்கே உழைக்கவந்தோருள் மருதியும் ஒருத்தி. மருதி மங்கைப் பருவத்தினள். விரலில் நகம் முளைக்கும் காலம் என்று பாட்டாளியர் கூறும் காலந்தொட்டு மருதி உழைத்துப் பழகியவள். காடு, கழனிகளில் வேலை செய்வதைவிட ஊர்திகளும் புதுவகைத் தொழிற் கருவிகளும் பயன்படுத்தப்படும் இந்த இரயில் நிலையத்தில் வேலை செய்வது மருதிக்கு மெத்தப் பிடித்திருந்தது. இந்த மாதிரி இடங்களில்

**க. இராசன்**

நாகரிகம் என்று ஏதோ ஒன்றைக் காண்பதாக அவள் எண்ணிக் கொண்டது அதற்கொரு காரணம்.

மருதி வெளிப்பகட்டையே நாகரிகம் என்று எடுத்துக்கொண்டாள். யார் யார் மடிப்புக் கலையாத உடைகள் உடுத்திருக்கிறார்களோ, அவர்கள் எல்லாம் நாகரிகம் உள்ளவர்கள், யார் யார் அதிகாரம் செலுத்தும் நிலையில் இருக்கின்றார்களோ, அவர்கள் எல்லாம் நாகரிகம் உடையவர்கள் என்று எண்ணினாள் அவள்.

அப்படி அவள் நாகரிகம் உடையவர்கள் என்று எடுத்துக்கொண்டோரில் அய்யாமுத்து என்பவன் ஒருவன், முதலில் ஒருவனாக இருந்து போகப்போக முக்கியமானவனாக மாறிக்கொண்டு வந்தான்—அவன் மருதியைப் பொறுத்த மட்டில்.

அய்யாமுத்து அங்கே உழைப்போரின் வேலைகளை மேற்பார்வை செய்யும் மேஸ்திரி என்று சொல்லிக் கொண்டு அங்கு வந்தான். ஆனால் மேஸ்திரி வேலையைவிட மேலதிகாரிகளுக்கு எடுபிடியாகப் பணியாற்றுவது அவனுக்கு மெத்தப் பிடித்திருந்தது. மொத்தத்தில் அவன் எந்த வேலையையும் சிரத்தையுடன், கருத்தாகப் புரிவது கிடையாது. எப்படியோ மேலதிகாரிகளைக் காக்கர பிடிக்கும் குணமும், தன்மையும் அவனிடம் நன்கு படிந்திருந்தன. அவற்றை முதலாக வைத்துக் கொண்டு அவன் உடம்பு அலுங்காமல், உழைப்பால் வருந்தாமல் மருதி போன்ற ஊர், உலகம் தெரியாதவர்களுக்கு நாகரிகத்தின் சின்னமாக உழைக்கின்ற பாட்டாளிகள் நிறைந்த அந்த வட்டாரத்தில் வளைய மிட்டு வந்துகொண்டிருந்தான்.

பெருஞ் சந்தடியும், நெருக்கடியும்' உழைக்கின்ற பரபரப்பும் நிறைந்தும், இறைந்தும் கிடக்கும் அந்த வட்டாரத்தில் மருதி—அய்யா முத்துவின் நட்பு நெருக்கமடைந்தது யாருக்கும் வியப்பையளிக்கவில்லை; பெரிய செய்தியாகவும் தோன்றவில்லை.

அந்த நட்பு மருதியின் உழைப்பையும் குறைத்தது. மெல்ல மெல்ல மருதியும் அய்யாமுத்தாக மாறிக் கொண்டு வந்தாள். அதாவது அதுவரை இயல்பாக அவள் உழைத்து வந்தஉழைப்புக்குறைந்தது. போதிய ஓய்வும், கடினமில்லாத வேலையும் கிடைத்தன.

“மருதி, இன்னையிலிருந்து இன்சுபெக்டர் ஐயாவுக்குச் சாப்பாடு கொண்டுவரும் வேலை உன் வேலை'' அன்று அய்யாமுத்துவந்துசொன்ன போது பெரியதொரு பதவியையே தான் மருதிக்கு அளித்துவிட்டதாக

எண்ணிக்கொண்டுதான் அவன் சொன்னான். மருதியும் தான் பெற்றது உயர்ந்த பதவி என்ற எண்ணத்தோடுதான் மகிழ்ந்தாள்.

உழைத்த காலத்தில் கிடைத்ததைவிட அதிகமாகவே மருதிக்கு இப்போது கூலி கிடைத்தது. எப்போதும் நிழலில் அமர்ந்திருக்கும் வாய்ப்பும் கிடைத்தது. அடிக்கடி அருகில் அய்யாமுத்துவும் இருந்தான். அந்த வாய்ப்பும், வசதியும் மருதியையும் நாகரிகம் என்று அவள் எண்ணிக்கொண்டிருந்த வெளிப்பகட்டில் வீழச் செய்தது.

அதிகாலையில் எழுந்து வரிசை வரிசையாகச் செல்லும் பாட்டாளி மக்களிடையே மருதி நவ நாகரிக நாரிமணியாக நடந்துசெல்வாள். இப்போது அவள் தலைமீது சும்மாடு இல்லை. அந்தச் சும்மாட்டின் மீதிருக்கும் மண் கூடையுமில்லை. முன்புபோல் பரக்கப் பரக்க ஓடுகின்ற ஓட்டமும் அவளிடம் இல்லை.

மெல்ல நடந்து, ஆடி அசைந்து செல்வாள் அவள். வழியில் போவோர், வருவோர், நிற்போர் அனைவரும் தன்னை ஏறிட்டுப் பார்க்கின்றார்களா என்று சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்தவண்ணம் நடந்து செல்லும் பாங்கை ஒரு தனிப் பாங்காகச் செய்துகொண்டாள் அவள். தலை நிறைய ஒரு புறம் கனகாம்பரம். பிறிதொருபுறம் சரமாகத் தோளில் ஊசலாடிக்கொண்டிருக்கும் மல்லிகை. உடலை இறுக்கிக் கெட்டியாகக் கட்டிக்கொண்டிருக்கும் பிராசியர்ஸ் வெளியே தெரியும்படி போட்டுக்கொண்டிருக்கும் காலர் வைத்த கண்ணாடி ரவிக்கை. உடம்பைச் சுற்றியிருக்கும் வெங்காயச் சருகுப் புடைவை. கண்ணுக்கு மை. உதட்டுக்குச் சாயம். முகத்திலே பௌடர். இவ்வளவு ஆடம்பரப் பொருள்களும் அவளுக்கு எப்படிக் கிடைக்கின்றன என்று எல்லாரும் வியந்து கேட்குமாறு அவள் நடந்துசெல்வாள். அவள் நடையிலே ஒரு புதிய ஒயில். பார்வையில் தனி மிடுக்கு.

நாளாக நாளாக மருதி, வீட்டுக்குத் திரும்பிவரும் காலம் மாறிக்கொண்டு வந்தது. வீடு வரை அவளுடன் அய்யாமுத்து வரும் வழக்கம் வாடிக்கையாகிவிட்டது. வாரத்தில் மூன்று தடவைகளாவது அவர்கள் படக் காட்சிக்குப் போகாமலிருப்பதில்லை.

நாட்கள் விரைந்துகொண்டிருந்தன. இரயில் நிலையத்து வேலை முடிந்துகொண்டு வந்தது. இன்னும் ஒரே ஒரு வாரம். அப்புறம் அங்கு வேலையே கிடையாது.

வெளியூர்க் கார அய்யாமுத்து மூட்டை கட்டினான். மருதிக்கு அப்போதுதான் திக்கென்றது.

"என்னை விட்டுட்டா போகப் போறே" முக்காலே மூன்றுவீசம் அழுகையில் மூழ்கி எழுந்து வெளியே வந்தன சொற்கள்.

"உன்னை விட்டுட்டுப் போவேனா? எல்லாத்துக்கும் ஏற்பாடு பண்ணியிருக்கிறேன். பயப்படாதே!"

"என்ன ஏற்பாடு?......மூட்டை கட்டுறே! கிளம்ப ஆயத்தப்பட்டுட்டே! என்கிட்டே ஒரு வார்த்தை கூடச் சொல்லலே..." மருதி அடுக்கிக்கொண்டு போனாள்.

"மூட்டை கட்டின உன்னைவிட்டுட்டுப் போயிடுவேன்னு அர்த்தமா? உன்கிட்டே சொல்லலேன்னா வேறே ஏற்பாடு பண்ணலேன்னு அர்த்தமா?"

அய்யாமுத்து பதட்டமில்லாமல் தான் பேசினான். ஆனால் வார்த்தைகள் தயங்கித் தயங்கி வெளிப் போந்தன.

சற்றுநேரம் அய்யாமுத்து மூட்டை கட்டுவதை நிறுத்திவிட்டு நிமிர்ந்து நின்றான்—வெட்டவெளியைப் பார்த்தவண்ணம்.

"ஆமா, நீ என்னோடே கிளம்பி வந்துட முடியுமா? உங்க அப்பா அம்மா சம்மதிக்கணுமே!"

"என்ன அப்புடிப் பேசறே! 'அவங்ககிட்டே சொல்லிக்கிட்டு இருந்தா, ஒண்ணும் சரிப்பட்டு வராது. சொல்லாமே கொள்ளாமே எங்கேயாவது வெளியூரிலே போய் நாலஞ்சு மாசம் இருந்துட்டு, பிறகு லெட்டர் போடலாம்! அப்போ எல்லாம் சரியாகப் போயிடும்' அப்புடீன்னு நீதானே அன்னிக்குச் சொன்னே?"

அய்யாமுத்து விதிர்த்துப் போனான். அந்த விதிர் விதிர்ப்பை எங்கே அவன்முகம் காட்டிவிடுமோ என்று அஞ்சினான். மூட்டைகட்டும் பாவனையில் குனிந்துகொண்டான். எப்போதோ ஒருதடவை, ஏதோ ஒரு நிலையில் அவன் விளையாட்டாகச் சொன்னது இப்படி வினையாக முடியுமென்று அவன் எதிர்பார்த்தானா என்ன!

'வேலையில்லாத காலத்தில் எங்கேபோய், எப்படித் தங்குவது?'

அவனுடைய மௌனம் மருதியின் உள்ளத்தில் சுருக்என்று தைத்தது.

"என்ன பேசலே?"

அவள் ஆதுரமாக அவன் அருகில் வந்து உராய்ந்து நின்றபடி கேட்டாள்.

"ஒண்ணுமில்லே...நீ வீட்டுக்குப் போ! இன்னிக்குச் சாயந்திரம் இரண்டுபேரும் கிளம்பிடலாம்!"

அய்யாமுத்துவின் வார்த்தையில் வேகமில்லை. அதை மருதியும் உணர்ந்தாள். என்ன செய்வாள் அவள்? முடிவு அவள் கையில் இல்லையே. எப்போதோ அது அவளிடமிருந்து அவன் கைக்கு மாறி விட்டதே!

"சரி, சாயந்திரம் வர்றேன்" என்று கிளம்பினாள் மருதி.

'ம்' என்றான் அய்யாமுத்து. நிமிர்ந்து பார்க்க முடியவில்லை அவனால்.

மருதிக்கு வீட்டில் நிலைகொள்ளவில்லை. அய்யாமுத்துவின்மீது நம்பிக்கை குறைந்துகொண்டுவந்தது. மாலை என்று சொல்லிவிட்டு நடுப்பகலே அவன் கிளம்பிவிட்டால்?

வெய்யிலையும் பாராமல் மருதி சட்டென்று வெளிக்கிளம்பினாள்.

அவள் எதிர்பார்த்தது சரி. அய்யாமுத்து வெளியேறச் சித்தமாகிக்கொண்டிருந்தான்.

"உன்னை அழைக்கத்தான் புறப்பட்டேன். அதற்குள்ளே நீயே வந்துட்டே!" என்று சமாளித்தான் அவன்.

வேறு வழியில்லை. இருவரும் கிளம்பிவிட்டார்கள்.

ஐம்பதுமைல் தொலைவிலுள்ள சேலம் நகரை அவர்கள் அடைந்த போது இருள் சூழ்ந்துகொண்டு வந்துவிட்டது.

"மருதி! சினிமாவுக்குப் போகலாமா?" வண்டியிலிருந்து இறங்கியதும் அய்யாமுத்து வினவினான்.

மருதிக்கு என்னவோ அன்று சினிமாபார்க்க வேண்டுமென்ற ஆசையே கிடையாது. என்றாலும் அவன் கேட்கிறானே! அவள் தட்டவில்லை.

முன்னே எத்தனையோ தடவை மேல் வகுப்பு டிக்கெட்டுகள் வாங்கிக்கொண்டு மருதியும், அய்யாமுத்துவும் அருகருகே அமர்ந்து படக்காட்சி பார்த்திருக்கிறார்கள். இன்றும் அப்படித்தான் இருவரும் மேல் வகுப்புக்குப் போகப்போவதாக நினைத்துக்கொண்டாள் அவள்.

"மருதி, என்கிட்டே காசு ரொம்ப இல்லே! நீ பெண்கள் காலரிக்குப் போயிடு. நானும் அப்படியே ஆண்கள் காலரிக்குப் போயிடறேன்!" என்று அய்யாமுத்து

சொன்னபோது மருதியின் தென்பில், நம்பிக்கையில் முக்காலே மூன்றுவீசம் போய்விட்டது.

அய்யாமுத்து அரை ரூபாயை எடுத்து நீட்டினுன் மருதியிடம். அவள் கை நீண்டு அதைப் பெற்றுக் கொண்டது. அப்போது அந்தக் கை நடுங்கியது. இயந்திரத்தைப்போல் அவள் நடந்தாள் பெண்கள் பகுதியை நோக்கி.

மருதிக்குப் படக் காட்சியில் மனம் செல்லவில்லை. அடிக்கொரு முறை ஆண்கள் பகுதியை நோக்கிக்கொண்டிருந்தாள் அவள்—அய்யாமுத்துவைக் காண. அந்தக் கூட்டத்துக்கிடையே அவனைக் கண்டுகொள்ள முடியவில்லை.

படக் காட்சி முடியவில்லை. மருதிக்கோ கொட்டகைக்குள் இருக்கை கொள்ளவில்லை. அவள் வெளியே வந்துவிட்டாள். வெளியே அவளுக்குத் திக்குத் திசை தெரியவில்லை. நின்ருள் அவள். அய்யாமுத்துவின் வருகையை எதிர்பார்த்து வழியோரமாக நின்ருள் அவள்.

படக்காட்சி முடிந்தது. கூட்டம் நெருக்கியடித்துக்கொண்டு வெளியே வந்தது. அந்தக் கூட்டமும் சற்று நேரத்தில் கலைந்தது. ஆனல், அய்யாமுத்துவை அங்கு காணேம்.

நேரமாகிக் கொண்டிருந்தது. மறு காட்சிக்குச் சீட்டுக் கொடுத்துவிட்டார்கள். அதோ காட்சியும் தொடங்கிவிட்டது.

வெளியில் அய்யாமுத்துமட்டுமா இல்லை! ஆள் நடமாட்டமேயில்லை.

கலங்கினுள் மருதி. துடித்தாள்; பரிதவித்தாள். கண்ணீர் சொரிந்தாள். அந்த நடுத்தெருவில் நின்று கதறமட்டும் அவள் விழையவில்லை.

"ஐயோ, பாவம்! ரொம்ப நாழியா இந்த இடத்திலே நின்னுக்கிட்டே இருக்கிறியே அம்மா! நீ எந்த ஊருக்குப் போகணும்? — இருட்டு வேளை. அறியாப் பொண்ணு. தன்னந்தனியா நிக்கிறே!"

வந்தவளை மருதி ஏறிட்டுப் பார்த்தாள். உலகம் தெரியாத, விவரமில்லாத மருதிக்கு வந்தவள் கருணையங் கடலாகவே தென்பட்டாள் போலும். தன் வரலாற்றைச் சொன்னுள் அவளிடம்.

"அட பரிதாபமே! வா, வா, வா! இந்த இடத்திலே நீ நிற்கக் கூடாது!"

மருதியின் கரத்தைப்பற்றி வந்தவள் இழுத்தாள்.

"எங்கே கூப்பிட றீங்க?"

"இருட்டு வேளை. அறியாப் பொண்ணு. உனக்கு நல்லதுக்குத்தான் கூப்புடறேன். வா!"

"எப்படியாவது என்னை ஊருக்கு அனுப்பிச்சுடுங்க. உங்களுக்குக் கோடி கோடிப் புண்ணியமாப் போவும்!"

*

இதோ இந்த வீடுதான் போலும் மருதிக்குப் புகல் தந்தவள் வீடு.

'இரண்டு மாதங்கள் இருந்தது போதுமா? இன்னும் இருந்துவிட்டுப் போ! உன் உடம்பில் வனப்பும், பொலிவும், நீரும், நிறைவும் தங்கியிருக்கும்வரை நீ இங்கே தங்கிவிட்டுப்போ!' என்று அங்குள்ளோர் அவளுக்குக் கட்டாய உபசரணைகள் புரிகிருர்கள் போலும்!

★

8-ம் பக்கத் தொடர்ச்சி

முடிக்கிறேன்......!" தந்தையைத் திருத்திவிட்ட—புதிய—பாதைக்குத் திருப்பிவிட்ட அந்த மகிழ்ச்சியைக் குறித்து ஒரு புன்னகை புரிந்தாள் செல்வி!

"அப்பா......!"

"என்னம்மா......?"

"இனி நான் உயிர்வாழ விரும்பவில்லையப்பா...!"

"ஐயோ...! அப்படிச் சொல்லாதேம்மா...நீ என் செல்வம்...வாழத்தான் வேண்டும்...!"

"இல்லையப்பா...!" என்னை...மன்னித்து... விடுங்கள்... உயிர் பறிக்கும்...உன்னத மருந்தைத் தின்றுவிட்டேனப்பா......!"

"செல்வி...!" அம்பலவாணரின் அந்த அலறலொலி வீடு முழுவதும் எதிரொலித்தது...! மாடியில் தூங்கிக்கொண்டிருந்த வேலம்மாளையும் எழுப்பியது...! தந்தையின் கரத்திலேயே அந்தத் தளிர்க்கொடியின் ஆவி...பிரிந்தது......! திருந்திய அம்பலவாணர் கண்ணீரால் தன் மகளைக் குளிப்பாட்டிக்கொண்டிருந்தார்!

★

9-ம் பக்கத் தொடர்ச்சி

அணைகள். எங்களுடைய துன்பத்தைப் பொறுக்கமாட்டாது இந்த முடிவுக்கு வந்தாரோ?

அவர் சென்று என் கண் பார்வையிலிருந்து மறைந்துவிட்டார். ஆனல், நான் இங்கு நின்று புலம்பிக்கொண்டிருக்கிறேன். காற்றின் வேகத்தால் அசையும் மரக்கிளைபோல் என் மனமும் துன்பத்தால் அசைந்தது---முடிவை அறியமாட்டாது! . . . ."

*

தரையில் தையலவள் தணலில் விழுந்த புழுவெனத் துடித்துக் கொண்டிருந்தாள். ஆனல், திரை கடல்மேல் சென்ற அவளது கணவனின் நிலை? . . . .

துன்பக் கடலில் மூழ்கித் தவித்த அவன் ஒரு முடிவுக்கு வந்தபின் கடல் மேல் கட்டுமரத்தைச்செலுத்தினுன்; அருணனின் ஒளி முகத்தை எங்கோ மறைத்துவைத்துவிட்டு அழுது கொண்டிருந்த வானத்தோடு வருணனும் ஒன்று சேர்ந்துவிட்டான்! ஆம்! . . . மழையோடு காற்றும் சேர்ந்துகொண்டது----அவன் கடல் மேல் சென்ற சிறிது நாழிகைக்குள், மழையை எதிர்த்துப்போராடும் வலிவற்ற அவன காற்றின் வலிமையை மட்டும் வெல்லமுடியுமா? காற்றுக்கு அடிமையானுன். அது அழைத்துச் சென்ற வழியே விழி மூடிச்சென்று கொண்டிருந்தான்.

காற்றுக்கு அடிமையான அவனுக்குக்கொஞ்சம் மீன்களும் கிடைத்தன. அவற்றை விற்றுப்பெறும் பணத்தில் இரண்டு, மூன்று தினங்களைக் கழிக்கலாம். அவன் கரையை வந்தடைவதற்கும் மழையுங் காற்றும் நிற்பதற்கும் சரியாக இருந்தது.

புயலுக்குப்பின் அமைதி, துன்பத்திற்குப்பின் இன்பம் என்று எண்ணி அகமகிழ்ந்து தன் ஆருயிர் மனைவியையும், அன்பு மக்களையும் காண ஆவலுடன் தன் குடிசையை வந்தடைந்தான்!

அங்கே! . . . . . . அவன் கண்ட காட்சி, அவனுடைய குடிசை தரையோடு தரையாக இடிந்து விழுந்து கிடந்தது! அவனைக் காப்பாற்றிய காற்று அவனுடைய மனைவியையும் மக்களையும் ஏனே காப்பாற்றத் தவறிவிட்டது! இயற்கை அவனுக்கு அளித்த பரிசு "அவனுடைய குடும்பத்தைத் தன்னுடைய பசிக்கு உணவாக்கிக் கொண்டதே!

புயலுக்குப் பின் அமைதி; துன்பத்திற்குபின் இன்பம்; ஆனல் அவனுடைய வாழ்வில் . . . . !!

★

# கோரோசனை

—மதி—

அந்த ஊருக்குப் போவதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று சுற்றி வளைத்துக்கொண்டு செல்லும் அகலமான சாலை. மற்றொன்று எட்டிப் பிடித்தாற்போல் போய்ச்சேருவதற்கு உதவும் குறுக்கு வழி; ஒற்றையடிப் பாதை. அந்த ஊரிலுள்ளோர் பெரும்பாலும் அந்த ஒற்றையடிப் பாதையைத்தான் பயன் படுத்துவார்கள். மிதிவண்டியிற் செல்வோர்கூடச் சுற்றி வளைத்துக்கொண்டுபோகும் அகலமான சாலையை விரும்புவதில்லை. அந்த ஒற்றையடிப் பாதை வழியே போவதைத்தான் விரும்புவார்கள். எனவே, அந்த ஒற்றையடிப்பாதையில் எப்போதும் ஆள் நடமாட்டம் இருந்து கொண்டே இருக்கும்.

அந்த ஒற்றையடிப்பாதையருகில், தரிசாகக் கிடந்த நிலத்தையொட்டிய வரப்பு ஓரமாக முத்தாயி தன் சிவலைப் பசுவை மேய்த்துக்கொண்டிருந்தாள். ஒருநாள் விட்டு ஒரு நாள், அல்லது வாரத்துக்கு இரண்டு மூன்று முறைகள் முத்தாயி தன் பசுவுடன் அந்தப் பகுதியில் உலவுவதைக் காணலாம். அந்தச் சிவலைப் பசுவை முத்தாயி மிகவும் ஆசையோடு வளர்த்து வந்தாள். கன்றுப் பருவம் தொட்டு அந்தப் பசு முத்தாயியின் கையிலேயே வளர்ந்து வந்தது. பார்வைக்கு அந்தப் பசு ஊட்டம் மிகுந்த காளையைப்போலவே தென்படும். முத்தாயியைத் தவிர, வேறு யாரையும் அது அருகிற் சேர்ப்பதில்லை. மேய்ச்சலுக்கு அதை ஓட்டி வரும்போது நீண்டதொரு கயிற்றை அதன் கழுத்திற் கட்டி ஓட்டி வருவாள் அவள். மேயும்போதுகூடக் கயிற்றின் ஒரு முனை முத்தாயியின் கையிலிருக்கும். சிவலை தன்பாட்டில் மேய்ந்துகொண்டிருக்கும். சாதுவைப்போல் அது மேய்ந்துகொண்டிருப்பதைப் பார்த்துவிட்டுப், பசு தானே என்று யாரேனும் அதன் அருகிற் சென்றுவிட்டாலோ, அவ்வளவுதான். திமிர்கொண்டு நிற்கும் கட்டுக் காளையாக ஒரு கணத்தில் அது மாறிவிடும்.

ஒரு நாள் முத்தாயி எங்கோ பராக்குப் பார்த்தவண்ணம் பாதைக்குச் சற்றே எட்டித் தன்னுடைய அருமைப் பசுவை மேயவிட்டுக்கொண்டிருந்தாள். கயிற்றுப் பிடி அவள் கையில்தான் இருந்தது; என்றாலும் அவ்வேளை கயிற்றைப்பற்றிய எண்ணமே இல்லாமல் பிடியைத் தளர விட்டுக் கொண்டிருந்தாள் அவள். திடீரென்று கயிற்றுப் பிடி உருவிக் கொண்டு போனபோதுதான் முத்தாயி பசுவின் பக்கம் திரும்பினாள்.

—(கனகு)—

பசு தன் கொம்புகளால் தரையைக் கீறிக்கொண்டு, சீறிக்கொண்டு, உறுமல் எழுப்பியவாறு ஓடிக்கொண்டிருந்தது. அதற்கு இரண்டு பாகம் முன்னால், இதோ அகப்பட்டுக் கொண்டார்; அதோ தூக்கிப்போட்டு விட்டது என்ற நிலையில் ஊர் நாட்டாண்மைக்காரர் ஓட்டம் பிடித்துக் கொண்டிருந்தார். நல்ல வேளை, எதிரே சிறிய மரமொன்று இருந்தது. சட்டென்று அந்த மரத்தின் மீது நாட்டாண்மைக்காரர் ஏறிக் கொண்டுவிட்டார்.

"முத்தி, முத்தி! ஓடிவிடு, ஓடிவிடு! உன்னைத் தூக்கிப் போட்டுவிடும் அந்தக் கோரோசனை! ஊரிலேபோய் ஆட்களை அழைத்து வா!" என்று மரத்தின்மீது நின்ற வண்ணம் கையும், காலும் உதற, உள்ளமும் உணர்வும் படபடக்கக் கூச்சல் போட்டார் நாட்டாண்மைக்காரர். ஆண்பிள்ளையாகிய தம்மையே வெறிகொண்டு விட்டாற்போல் துரத்திக் கொண்டுவரும் அந்தப் பசு முத்தாயியிடமா அடங்கப்போகிறது என்று எண்ணினார் போலும் அவர்!

"ஏ, செவத்தி!"

பெரியதொரு அதட்டல் போட்டாள் முத்தாயி.

அவ்வளவுதான். கட்டுக் காளையாக மாறி வெறியோடு நின்ற அந்தப் பசு, மகுடிக்கு அடங்கிய நாகத்தைப்போல் சாதுவாக மாறி நின்றது. குறும்பு செய்துவிட்ட பிள்ளை மெல்ல மெல்லத் தயங்கித் தயங்கித் தன் அன்னையிடம் மன்னிப்புக்கோரி நடந்து வருவதுபோல், முத்தாயியை நோக்கித் தலையைக் கீழே போட்ட வண்ணம் அது மென்னடை போட்டு வந்தது.

மரத்தின்மீது நின்றவாறே அந்தக் காட்சியை வேடிக்கை பார்த்த நாட்டாண்மைக்காரர் அந்தப் பசு திடீரென்று கொண்டுவிட்ட அடக்கத்தையும், அதன்பால் முத்தாயி கொண்டுள்ள கனிவு நிறைந்த பற்றையும், பாசத்தையும் வியந்தவாறு தம்மை மறந்து தொப்பென்று கீழே குதித்தார்.

"உன்னைக் கோரோசனை என்கிறார்களே, உனக்கு வெட்கமில்லை! இப்படி வழியில் போகின்றவர்கள் மீதெல்லாம் பாய்வதற்கு ஓட்லாமா?" என்று ஆதுரத்துடன் தன் பசுவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அதன் முகத்துக்கு நேரே தன் முகத்தை வைத்துக்கொண்டு முத்தாயி வினவினாள்.

அந்தச் சிவலையும் தன் தவறுக்குக் குறை இரப்பதுபோல் தன் தலையை ஆட்டிக்காட்டிற்று.

"கோரோசனை இல்லாமல் பின்னே என்னவாம்? இப்படி வழியில் வருகிற வர்கள் மேல் எல்லாம் பாய்ந்து கொண்டு வந்தால் பரவாயில்லை. உன் பசுவைக் கோரோசனை என்று சொன்னதுதான் தவறாகப் போய் விட்டது. இல்லையா?'' என்று கேலி கலந்த குரலில் கேட்டுவிட்டு, "முத்தி, நீ மிகவும் கெட்டிக்காரி'' என்று அவள் தோளில் தட்டிக் கொடுத்துவிட்டுப் போனார் அந்த வயோதிக நாட்டாண்மைக்காரர்.

ஒரு நாள் அந்தச் சின்ன ஊருக்கு வட்டார வளர்ச்சி அலுவலர் வருகை தந்தார். அவருடன் இரண்டு சேவக்குகளும், இரண்டு சேவகி களும் புடைசூழ்ந்து வந்தனர்.

"நம் மாவட்டத்தில் பசு வளர்ப்பை ஊக்குவதற்கென்று ஒரு திட்டம் கொண்டுவந்திருக்கிறோம். அந்தத் திட்டத்தின்படி ஒவ்வொரு ஊரிலும் பசு வளர்ப்பில் ஈடுபாடு உள்ளவர் களுக்குத் தக்க யோசனைகள் கூறு வதற்கென்றும், தேவையான எல்லா உதவிகளையும் அளிப்பதற்கென்றும் ஒரு தனி இலாகாவை ஏற்படுத்தி இருக்கிறோம். இதோ அந்தப் பிரி வில் நம் பகுதியில் சேவை செய்வ தற்காக நியமிக்கப்பட்டிருக்கும் சேவக்—இவர் பெயர் வைரம். இதோ சேவகி, இவள் பெயர் மரகதம்'' என்று உடன் வந்தோருள் இருவரை அறிமுகம் செய்துவைத்தார்-அங்கே சுற்றி நின்றோரிடம் அலுவலர்.

அந்தச் சேவக்கும், சேவகியும் தங்களுக்கே உரித்தான நளினத் துடன் ஊர் நாட்டாண்மைக்காரருக் கும், மற்றும் அங்கே சுற்றி நின்ற சிறியோர், பெரியோர் அனைவருக்கும் வணக்கம் தெரிவித்துக்கொண்டனர்

அங்கே சூழ நின்றோரும் அந்தப் புதிய இணையை உற்று, உற்றுப் பார்த்தும், ஏறிட்டு நோக்கியும் 'வாழ்க உங்கள் சேவை! வெல்க உங்கள் குறிக்கோள்' என்று பாவனையால் வாழ்த்தினர்.

மேலும் பேச்சைத் தொடர்ந்தார். அலுவலர்:

"அதோடு ஒரு பரிசுத் திட்டமும் வைத்திருக்கிறோம். — அடுத்த மாதமே அந்தப் பரிசுப் போட்டிக் கென்று சிறந்த பசுக்களை ஒவ்வொரு ஊரிலிருந்தும் பொறுக்கி எடுக்கப் போகிறோம். மாவட்டத்திலேயே சிறந்ததென்று தேர்ந்தெடுக்கப்படும் பசுவுக்கு இருநூறு ரூபாய் ரொக்கப் பரிசு தரப்படும். மாநிலத்தில் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்படும் பசுவிற்கு ஆயிரம் ரூபாய் பரிசு கொடுக்கப்படும்.''

"அப்படியா! ஆயிர ரூபாய் பரிசா பரவாயில்லையே! இது எனக்கு முன்னமே தெரியாமல் போய்விட் டதே!'' என்று அந்த ஊர்ச் சில் லறைக் கடைக்காரச் சின்னசாமி அதைக் கேட்டதும் அங்கலாய்த் துக்கொண்டார். அவர் இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் தம் மிடமிருந்த பசுமாடு ஒன்றையும் இரண்டு எருதுமாடுகளையும் ஈன விலைக்கு அவசர அவசரமாக விற்று விட்டு, அந்தச் சின்ன ஊரிலே சில் லறைக் கடை தொடங்கியிருந்தார். 'ஆயிரம் ரூபாயா!' என்று அதி சயித்தவண்ணம் மேலும் இருவர் அங்கே வாயைப் பிளந்துகொண்டு நின்றார்கள்.

"வெறும் ஆயிர ரூபாய் மட்டும் என்று எண்ணிவிடாதீர்கள்! இங் கிருந்து போட்டி நடக்குமிடத்திற் குப் போகவரச் செலவு, அங்கே டெல்லியிலிருந்து வரும் பெரிய மந்திரியுடன் கைகுலுக்கல். அவர் கூறும் பாராட்டுக்கள். அவரோடு தேநீர் விருந்து. செய்தியாளர் களுக்குப் பேட்டி; புகைப்படம், பிறகு சினிமாப் படம். அப்புறம் எல்லாச் செய்தித்தாள்களிலும் உங் களைப்பற்றிய செய்தி.''

"அதெல்லாம் கிடக்கட்டுங்க. ஆயிரம் ரூபாயை விள்ளாமல், விரி யாமல் அப்படியே எடுத்துக் குடுக் கிறாங்களே, அதைச் சொல்லுங்க!'' என்றார் எப்போதும் அந்தச் சிற்றூர் வாசியாகவே வாழ்ந்து வந்துவிட்ட ஒரு வயது முதிர்ந்தவர்.

பரிசு என்று சொன்னவுடன் நாட்டாண்மைக்காரருக்கு முத்தாயி யும், அவள் பசுவும் சட்டென்று நினைவுக்கு வந்தன.

"சார், சார், இங்கே அருமையான பசு ஒன்று இருக்குதுங்க. ஆனா, மொரடு. கொஞ்சம் கோரோசனை பிடிச்சது. தலைச்சன் கன்னுதான் போட்டிருக்குது. பார்வைக்குக் கூனி எருதுமாதிரி இருக்குமுங்க. அதைப் போட்டிக்கு அனுப்பி வெச்சா, கண்டிப்பா அதுக்குத் தான் ஆயிரம் ரூபா பரிசு கெடைக் குமுங்க.''

"அப்படியா! அந்தப் பசுவை இப் போதே பார்த்துவிடலாம்!'' என்று அலுவலர் எழுந்தார். நாட்டாண் மைக்காரர் வழிகாட்டிக்கொண்டு சென்றார். பரிவாரம் பின் சென் றது.

அவர்கள் போனபோது முத்தாயி வீட்டில் இல்லை. பசுமட்டும் அங்கே கட்டப்பட்டிருந்தது. கூட்டத்தைக் கண்டதும் அது மருண்டுகொண்டு, உஸ் உஸ் என்று உயிர்த்துக் கொண்டு, கட்டுத்தறியையே துணித்துவிடுவதுபோல் வெட்டி வெட்டி இழுத்தது.

நாட்டாண்மைக்காரர் சொன் னது முற்றும் உண்மையாக இருப் பதைக் கண்ட வட்டார வளர்ச்சி அலுவலர், அந்தப் பசுவைக் கண் டிப்பாக மாநிலப் பரிசுப் போட்டிக்கு அனுப்பி வைப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் தாமே செய்வதாக நாட்டாண்மைக்காரரிடம் சொன் னார். அந்த மகிழ்ச்சி நிறைந்த செய்தியை முத்தாயிடம் சொல்லு மாறும் கேட்டுக்கொண்டார்.

பத்து நாட்கள் கழிந்த பின் ஒரு நாள் வழக்கம்போல் அந்த ஒற்றை யடிப் பாதையருகில் தன் செல்வப் பசுவை மேயவிட்டுக்கொண்டு நின் றாள் முத்தி. அப்போது அவள் உள்ளம் நாட்டாண்மைக்காரரைப் பற்றி எண்ணிக்கொண்டிருந்தது. 'எவ்வளவு நல்ல மனிதர் இந்த நாட் டாண்மைக்காரர். என்பசு அவர் மீது பாயப் போயிற்று. துரத்திக் கொண்டு ஓடிற்று. அதைக் கொஞ் சங்கூட மனத்தில் வைக்கவில்லையே அவர். பெரிது பண்ணிக்கொள்ள வில்லையே அவர். என்பசு செய்த குறும்பை மறந்து, அதற்குப் பரிசு வாங்கித்தரவல்லவா அவர் முனைந்து நிற்கிறார். எல்லா ஊர்களிலும் உள்ள பெரிய மனிதர்கள் எல்லா ரும் இப்படித்தான் நல்லவர்களாக இருப்பார்களா?'

முத்தாயி இப்படி எண்ணிக் கொண்டிருந்தபோது 'அதோ, அதோ! அந்தப் பசுதான்!' என்று குரல் கேட்டது. அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

அப்போது சாலை வழியாக ஒரே மிதி வண்டியில் இரண்டு பேர்— ஆண் மகன் ஒருவனும், பெண் ணொருத்தியுமாகப் போய்க்கொண் டிருந்தவர்கள் சட்டென்று மிதிவண் டியைத் திருப்பி, முத்தாயி தன் பசு வோடு நின்ற பக்கம் ஒற்றையடிப் பாதை வழியே வந்தார்கள். அவர் கள் சிரித்துச் சிரித்து உரக்கப் பேசிக்கொண்டு வந்தார்கள். கேலி

யும் கிண்டலுமாகப் பேசிக்கொண்டு வந்தார்கள். ஆண் மகன் மிதிவண்டியை இயக்கிக்கொண்டு வந்தான். அந்தப் பெண் மிதி வண்டியின் எதிரில் கைப்பிடியைப் பற்றியவாறு அமர்ந்து வந்தாள். இருவரும் ஒருவரோடொருவர் ஒட்டிக்கொண்டு வந்தது முத்தாயிக்கும் பெரிய வேடிக்கையாக இருந்தது. அந்தப் பெண் நல்ல சிவப்பு நிறம். வாட்டசாட்டமான உடற்கட்டு. அவள் தன் அங்கம் முழுதையும் நைலான் மூலம் காட்டிக்கொண்டிருந்தாள். நெற்றியில் சிறிய கோடு ஒன்று இழுத்தாற்போல் கறுப்புப் பொட்டு. நன்றாக வாரியபின் சும்மா சுற்றிக் கட்டப்பட்டதுபோல் கொண்டையிடப்பட்ட கேசம். அந்தக் கொண்டையைச் சுற்றிலும் பச்சைப் பசேல் என்ற சில்க் பட்டை. அகலமான கண்களைப் பின்னும் அகலமாக்கிக் காட்டுவதுபோல் மையிட்ட கண்கள். இத்துணை தடபுடலான அலங்காரத்தோடு அந்தப் பெண் காட்சியளித்தாள். அந்த நேரமோ பகல் மூன்று மணிக்கு மேற்பட்ட நேரம். பொழுது மூடிக்கிடந்தது. முதல் நாள் பெய்த மழை காரணமாகச் சுற்றிலுமிருந்த பயிர்வகை, மரஞ்செடி கொடிகள் எல்லாம் தண்மை நிறைந்த பசுமையோடு காணப்பட்டன. அந்தப் பசுமையையும், தண்மையையும் அவையில்லாத எல்லா இடங்களிலும் பரப்புவதேபோல் மென்காற்று இலேசாக வீசிக்கொண்டிருந்தது. அந்தக் கோலாகலமான சூழ்நிலையில் முத்தாயி ஏதோ படக்காட்சியைப் பார்ப்பதுபோல் அந்த மிதி வண்டி இணையை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள்.

அந்த மிதிவண்டி இணை நேரே முத்தாயி அருகில்வந்தது. அவர்கள் அங்கே முத்தாயி அருகில் நின்ற பசுவையே உற்று உற்றுப் பார்த்த வண்ணம், அதே எண்ணமாக வந்தார்கள். முத்தாயியோ வைத்தகண் வாங்காமல், தன்னை மறந்து வந்தவர்களையே நோக்கிக்கொண்டிருந்தாள்.

அவர்கள் மிதிவண்டியிலிருந்து இறங்கினார்கள். அவ்வளவுதான். ஆவென்று கத்திக்கொண்டு ஓடத் தொடங்கினார்கள்.

சீற்றத்தோடு பாய்ந்துகொண்டு வந்த முத்தாயின்பசுவை அவ்வேளை அவர்கள் பசுவாகவே எண்ணவில்லை. அது புலியாகவே அவர்கள் கண்ணுக்குக் காட்சியளித்தது.

முதல் நாள் பெய்திருந்த மழையால் அந்த ஒற்றையடிப்பாதையெங்கும் சேறும், சகதியுமாக இருந்தது. வழுக்கற்காடாக இருந்தது. பீதிகொண்டு பதறிவிட்ட அவர்கள் இருவரில் முன்னால் ஓடிய அந்தப் பெண் வழுக்கலில் கால்வைத்துப் பரவிக்கிடந்த சேற்றில் சருக்கிக் கொண்டுவிழுந்தாள். பின்னால் ஓடிய அந்த இளைஞனும் சகதியில் நன்றாக வீழ்ந்தான் — முன்னால் ஓடிவிழுந்துவிட்ட அந்தப் பெண்ணின்மேல் தடுக்கிக்கொண்டு. அந்த இளைஞன் ஸ்லாக் எல்லாம் ஒரே சேறு. முகம், கை, கால் அனைத்திலும் சேறு. அந்தப் பெண்ணின் நைலானே தன் கண்ணாடித் தன்மையை இழந்துவிட்டது. ஒரு குடம் கெட்டியான சந்தனக் குழம்பைத் தலைமீது அப்படியே கொட்டிக் கவிழ்த்தாற்போல் அந்தப் பெண்ணின் கொண்டல் நிகர் கூந்தல் முற்றும் ஒரே சேற்றுப் பூச்சு. முகம் செம்மண்ணால் மேக்கப் செய்யப்பட்டதுபோல் காட்சி தந்தது.

அந்த நிலையில் அவர்கள் இருவரும் சேற்றுப்படுக்கையில் வீழ்ந்து கிடப்பதைப் பார்க்கப் பார்க்க முத்தாயிக்குச் சிரிப்புத்தான் வந்தது தன்னை மீறிக்கொண்டு. என்றாலும் அவள் சிரிக்கவில்லை. தன்னை நெட்டித் தள்ளிக்கொண்டு ஓடமுயன்ற பசுவை அப்போதே அவள் சுண்டியிழுத்து நிறுத்திவிட்டாள். அதனை அருகிலிருந்த மரத்திற் கட்டிவிட்டு, அந்த இருவரும் வீழ்ந்துகிடந்த இடத்துக்கு ஓடினாள்.

"அடி ஒண்ணும் படவில்லையே?" என்று தன் இரங்கலை வினாவாகத் தொடுத்தாள் முத்தாயி.

"என்ன பசு வளர்க்கிறே! அவலட்சணம்பிடிச்ச பசு!" என்று அந்தப் பெண் முணுமுணுத்தாள். என்றாலும் அந்த இருவராலும் முத்தாயை நிமிர்ந்துபார்க்க முடியவில்லை. வெட்கம் அவர்களைப் புரட்டிப் புரட்டிச் சாடியது.

அந்த இருவரும் வேறுயாருமில்லை பத்து நாட்களுக்கு முன் அந்த ஊருக்கு வருகை தந்திருந்த வட்டார வளர்ச்சி அலுவலருடன் வந்திருந்த வைரமும், மரகதமும்தான். அவர்கள் வந்ததுகூட முத்தாயின் பசுவைப்பார்க்கத்தான்; — பசு வளர்ப்புப் போட்டியைப் பற்றியும், முத்தாயி தன் பசுவைப் போட்டியில் கலந்துகொள்வதற்காக அனுப்புவதற்கான ஏற்பாடுகளை வட்டார வளர்ச்சி அலுவலர் செய்திருப்பது பற்றியும் அவளிடம் விவரமாகச் சொல்வதற்காகத்தான்.

**வட்டாரவளர்ச்சி அலுவலர் மூலமாகவும், வைரம், மரகதம் வாயிலாகவும் அந்த வட்டாரம் முழுதும் முத்தாயியின் பசுவைப்பற்றியசெய்தி பரவியது. பசு வளர்ச்சியில் அக்கறையிருந்ததோ இல்லையோ, பசு வளர்ச்சிக்கென அரசு நடத்தப்போகும் போட்டியிற் கலந்துகொள்வதற்கும், அதன்மூலம் பெயருக்கும், புகழுக்குமாகப் பரிசினைப் பெறுவதற்கும் விழைவுகொண்டவர்கள் அந்த வட்டாரத்தில் பலர். அப்படி விழைவு கொண்டோரிற் சிலர் பசுக்களை வைத்து வளர்த்து வருவோர். அந்தச் சிலருள் மிகச் சிலர் முத்தாயியின் பசுவை வந்து பார்வையிட்டுப் போகத்தொடங்கினர். அப்படிப் பார்வையிட வந்தோரில் காணியூர் கான்ட்ராக்டர் கந்தசாமியும் ஒருவர்.**

**முத்தாயியின் பசுவைப் பார்க்க வந்த கந்தசாமி அதன் ஊட்டத்தையும், தோற்றத்தையும் செழுமையையும், வனப்பையும் கண்டு சொக்கிப் போனாரோ இல்லையோ, அசந்து நின்றுவிட்டார்.**

**கந்தசாமிக்கு ஒரு ஆசை பெருமளவில் விழுந்துவிட்டது. ஊர் நாட்டாண்மைக்காரரைத் தனிமையாக அழைத்துப்போய் அவர் பேசினார்.**

**"ஊர், உலகம் தெரியாத அந்தப் பெண் முத்திக்கு அரசு வழங்கப் போகும் இந்தப் பரிசின் தன்மையோ பெருமையோ தெரியாது. எங்கோ ஒரு மூலையில், இவள் ஏதோ ஒரு குருட்டுப் போக்கில் வளர்த்துவிட்ட தன் பசுவின் மூலமாக அடையப் போகும் பரிசினால் என்ன புகழ் பெற்றுவிடப்போகிறாள்? அந்தப்பசு நம்மைப்போன்றவர்களுக்கு..."**

**"ஆமாம், இப்போது என்ன செய்யலாம்? அந்தப் பசுவையே போட்டியிற் கலந்துகொள்ளாதபடி தடுத்துவிடலாமா?"**

**"சேச்சே! அது கூடாது. அந்தப் பசுவை முத்தாயியிடமிருந்து விலைக்கு வாங்கிவிடலாம்!—பரிசின் மூலமாக அவளுக்குக் கிடைக்கப் போவது ஆயிரம் ரூபாய்தான். நாம் இரண்டாயிரம் ரூபாய்கொடுத்து விடுவோம்!"**

**நாட்டாண்மைக்காரர் வியந்து நின்றார்.**

**'இரண்டாயிரம் ரூபாய்! ஒரு பசுவுக்கு! அப்பாடி!'**

**முத்தாயி இரண்டாயிரத்துக்கு ஆசைப்படுவாள் என்று எண்ணித்**

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

தான் உடனடியாக அந்தச் செய்தியை அவரிடம் தெரிவித்தார் நாட்டாண்மைக்காரர்.

"உங்கள் இரண்டாயிரமும், ஐயாயிரமும்! யாருக்குவேணும் அது? என் பசுவைக் கோடி கோடியாக் கொட்டிக் கொடுத்தாலும் நான் கொடுக்கமாட்டேன். அதுவும் யாரிடமும் போய் இருக்காது. கடைசிக் காலம் வரைக்கும் அது என்னிடம் தான் இருக்கும்."

'அட, ஊர், உலகம் தெரியாத முத்தியா இப்படிப் பேசுகிறாள்!'

கந்தசாமியும், நாட்டாண்மைக்காரரும் அதிசயித்துப் போனார்கள். கந்தசாமி மேலும், மேலும் விலையை ஏற்றிக்கொண்டுபோனார். முத்தாயி மசிந்துகொடுக்கவில்லை. எப்படியாவது அரசுதரும் பரிசு தன் பெயருக்குக் கிடைக்கவேண்டும் என்பது கந்தசாமியின் பெருகிய ஆசை.

காரியம் கைகூடாது என்று கடைசியில் நாட்டாண்மைக்காரர் கந்தசாமியிடம் அழுத்தமாகச் சொல்லிவிட்டார். கந்தசாமி நடந்தார் எதையோ முடிவுசெய்துகொண்டுவிட்டவர்போல்.

போட்டி நாள் அண்மியது. தன் பசுவுடன் கிளம்புவதற்கு முத்தாயி துடித்துக்கொண்டிருந்தாள்.

வைரம் என்ற சேவக் லாரியோடு வந்துகொண்டிருந்தான் முத்தாயியின் பசுவைக் கொண்டுசெல்வதற்கு. வழியில் கந்தசாமி நின்றார். அவருக்குத் தெரியாதா லாரி போவது முத்தியியின் பசுவை ஏற்றிச் செல்வதற்காகத்தான் என்று. அவர் லாரியை நிறுத்தினார் கைகாட்டி.

வைரம் அடக்க ஒடுக்கத்தோடு இறங்கிவந்து கந்தசாமியின் எதிரில் நின்றான். மெல்ல, லாரிக்குச் சற்றே எட்டி அவனை அழைத்துச்சென்றார் கந்தசாமி. சிறிது நேரம் இருவரிடையேயும் பேச்சு நிகழ்ந்தது. பிறகு வைரம் லாரியில் வந்து ஏறிக் கொண்டான்.

போகும் வழியில் விலங்கு மருத்துவர் இல்லம், அங்கே லாரி நின்றது. வைரம் விலங்கு மருத்துவரின் இல்லத்துக்குள் நுழைந்தான். சிறு பொழுதில் மருத்துவருடன் வெளியில் வந்தான். இருவரும் லாரியில் ஏறிக்கொண்டனர்.

வெவ்வேறு ஊர்களிலிருந்து வந்திருந்த ஏறத்தாழ நூறு பசுக்கள் பெரிய கொட்டகையொன்றில் நிறுத்தப்பட்டிருந்தன. அங்கே எல்லாருடைய கவனத்தையும் ஈர்த்தது முத்தியின் சிவலைப் பசுதான். நாட்டுப்புறத்தில் வாழும் பேதைமை நிறைந்த பெண்ணொருத்தி இவ்வளவு வளமையான பசுவொன்றை வளர்த்திருக்கிறாளே என்ற பேச்சுத்தான் அனைவரிடத்தும் அடிபட்டது.

அங்கும் விலங்கு மருத்துவர் வந்தார். ஒவ்வொரு பசுவையும் சோதித்தார். முத்தியின் பசுவை நெருங்கி அதைச் சோதித்தபோது ஐயப்பாட்டோடு அவர் ஏதேதோ வினவினார். அவர் கேட்ட கேள்விகள் முத்தாயிக்கு என்னவோபோலிருந்தன. அப்போதுதான் மற்றப் பசுக்களையெல்லாம் உற்று நோக்கினாள் அவள். தன் பசுவையும் பார்த்தாள். ஆமாம், மருத்துவரின் ஐயப்பாட்டிற்கிசைய அவளும் தன் பசுவிடத்தில் மாறுதலைக் கண்டாள். அது அசையாமல் ஏதோ ஒருவிதமாக நின்றது. அசைபோடாமல் நின்றது. அது தன் துடுக்குத்தனத்தை ஒளித்துக் கொண்டுவிட்டதுபோல் தோன்றியது. நெடுநேரமாக அது சிறு நீர் கழிக்காமலிருப்பதையும் அப்போதுதான் அவள் உணர்ந்தாள்;—கண்டாள். அந்தக் குறிகள் எல்லாம் நோய் கண்டுவிட்ட பசுவினிடத்துத் தென்படும் அறிகுறிகள்.

எல்லாப் பசுக்களுக்கும் தவிட்டுத் தண்ணீர் கொண்டுவந்து காட்டினார்கள். மற்றப் பசுக்கள் எல்லாம் தவிட்டு நீரை நன்றாகப் பருகின. முத்தாயியின் பசு அந்தத் தவிட்டு நீரை முகர்ந்துகூடப் பார்க்கவில்லை. முத்தாயியிக்குக் கலக்கம் உண்டாகி விட்டது.

பெரிய மருத்துவர் ஓடிவந்தார். பசுவைச் சோதித்துப் பார்த்தார். ஆமாம், முத்தாயியின் பசுவிற்கு நோய் கண்டுவிட்டிருந்தது. என்ன நோய் திடுதிப் என்று அப்படி? அது அந்தப் பெரிய மருத்துவருக்குப் புரிந்துவிட்டது. அவர் தன் சட்டைப் பையில் இருந்து ஏதோ ஒரு புட்டியை எடுத்து அந்தப் பசு முகரும்படி அதன் மூக்கின் பக்கம் காட்டினார்.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. முத்தாயியின் பசு நிற்கமாட்டாமல் தடுமாறிக் கொண்டிருந்த நிலைமாறித் தெளிவடைந்து நின்றது. முத்தாயியை அன்போடு பார்த்தது. முத்தாயி நினைவிழந்து நின்றாள்.

மெல்ல மெல்ல முத்தாயியின் மயக்கம் தெளிந்துகொண்டு வந்தது. மூடியிருந்த கண்கள் திறந்து கொண்டன. அவள் சுற்று முற்றும் நோக்கினாள். தன் குடிலுக்குள், பாயில் படுத்துக் கிடப்பதை அவள் உணர்ந்தாள். தன் உற்ற பெற்ற சுற்றமாகிய ஏழையர் கூட்டம் தன்னைச் சூழவும் நிற்பதைக் கண்டாள். சட்டென்று அவள் எழுந்தாள். வெறிபிடித்தவள்போல் வெளியே ஓடி வந்தாள். தன் பசு கட்டிவைக்கப்படும் கட்டுத்துறையை நோக்கினாள். அது அங்கே கெம்பீரமாக நின்று கொண்டிருந்தது.

முத்தாயியின் குடிசில் எதிரே இருவர் நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் கையில் ஒரு பை இருந்தது; அதை அவர்கள் முத்தாயியிடம் தந்துவிட்டு வணக்கமும் செலுத்திவிட்டு, "இந்தப் பையில் சர்க்கார் அளித்த பரிசுப் பணம் ஆயிர ரூபாய் இருக்கிறது" என்று சொல்லிவிட்டு விடைபெற்றுக்கொண்டு போய்விட்டார்கள்.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.